
வானவில்

VAANAVIL

இதழ் 108 | மார்கழி 2019

ISSUE 108 | DECEMBER 2019

# அதிகாரப் பகிர்வை எக்காரணம் கொண்டும் தட்டிக் கழிக்க முடியாது!




***2019*** நொவம்பர் 16இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டிய கோத்தபாய ராஜபக்ச, இந்திய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இரு வாரங்களுக்குள் அந்த நாட்டுக்கு தனது முதல் வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டார்.

அங்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இந்திய பிரதமர் 13ஆவது திருத்த சட்டத்தை அமுலாக்கி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும்படி இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதாக செய்திகள் வந்தன. இதன் அர்த்தம் 13ஆவது திருத்த சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட மாகாண சபைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி கோரியதே.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி இலங்கை அரசியல் அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட சட்ட ஏற்பாடே 13ஆவது திருத்த சட்டமாகும்.

இந்த ஒப்பந்தத்தில் அன்று கையெழுத்திட்டவர்கள் இந்திய காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியும், இலங்கையின் ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் ஆவர்.

ஆனால் அப்பொழுதே ஜே.ஆர். ஆட்சியின் பிரதமர் ஆர்.பிரேமதாசவும், சிறீலங்கா சுதந்திர கட்சி, ஜே.வி.பி. என்பனவும் அந்த ஒப்பந்தத்தை எதிர்த்தன.

ஜே.ஆரை தொடர்ந்து ஜனாதிபதி பதவிக்கு தெரிவான ஆர்.பிரேமதாச, 13ஆவது திருத்த சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையை கலைத்ததுடன், 13ஆவது திருத்த சட்டத்தையும் கிடப்பில் போட்டார்.

வடக்கு கிழக்கு மாகாண சபையை பிரேமதாச கலைத்தாலும். 13ஆவது திருத்த சட்டத்தை இலங்கையின் அரசியல் அமைப்பிலிருந்து அகற்ற அவர் முயற்சிக்கவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, இலங்கை ஒருதலைப்பட்சமாக அதை நீக்க முயன்றால் இந்தியாவின் விரோதத்தை சம்பாதிக்க வேண்டிவரும் என்ற பயம். இரண்டாவது காரணம், அந்த திருத்தத்தை நீக்கிவிட்டால் தமிழ் மக்களுக்கு இருந்த ஒரேயொரு நம்பிக்கையையும் தகர்த்து அவர்களின் முற்றுமுழுதான எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டி வரலாம் என்ற பயம்.

இந்த நிலைமையில்தான் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 2009இல் புலிகள் அரச படைகளால் தோற்கடிக்கப்பட்டதுடன் போர் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் அவர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கு தேர்தலை நடத்தினார். ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்திருப்பதற்கு எதிராக ஜே.வி.பி. நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்ததால், இரு மாகாணங்களும் பிரிக்கப்பட்டு தனித்தனியாகவே தேர்தல் நடந்தது.

இதில் முக்கியமான விடயம் என்னவெனில், மகிந்த ராஜபக்ச இந்த இரு மாகாண சபைகளுக்கும் தேர்தல் நடத்தியதன் மூலம், தமிழ் பேசும் மக்களுக்கான அதிகார பகிர்வை ஏற்று கொண்டார் என்பதே. ஆனால் அவரும் சரி, அவருக்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகள் ஜே.ஆர்., பிரேமதாச, சந்திரிக ஆகியோரும் சரி, 13ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. அதற்கு காரணம், 13ஆவது திருத்த சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்க முடியாது என்று அவர்கள் கருதியதே.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

நூறு சிந்தனை மலரட்டும்

# மறவன்புலவு மின் காற்றாலைகளுக்கு எதிரான எதிர்ப்புகள்

தென்மராட்சி மறவன்புலவு பகுதியில் காற்றிலிருந்து மின்னுற்பத்தி பெற்றுக்கொள்ளும் நோக்கில் LTL (Lanka Transformers Limited) நிறுவனத்தால் நான்கு காற்றாலைகள் அமைக்கப்படுவதற்கு எதிராக கடந்த இரண்டு வருடங்களாக அப்பகுதி மக்கள் எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகிறார்களெனக் கூறப்படுகின்றது. எனினும் கடந்த மே மற்றும் செப்படம்பர் மாதத்து இலங்கையின் தமிழ் சார்ந்த ஊடகங்களில் மக்களின் போராட்டங்கள் குறித்த செய்திகள் படங்களுடன் வெளிவந்த பின்னரே, இது தொடர்பான கவனம் பொதுவாக எல்லோரையும் ஈர்த்துள்ளன. பின்னர் இம்மாதம் 12ந் திகதி காற்றாலைகள் அமைக்க வந்த தொழிலாளர்களை அப்பகுதி மக்கள் அடித்து விரட்டும் வீடியோக் காட்சிகளை பல தமிழ் சமூக ஊடகங்களில் காணக்கூடியதாக இருந்தது. அதைத் தொடர்ந்து பொலிசாரல் எட்டுப்பேர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுமுள்ளனர்.

காற்றாலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் இந்தத் திட்டம் பற்றி வழமைபோல் தமிழ் ஊடகங்கள் அனைத்துமே, 'தென்னிலங்கை அரசால் வடபகுதித் தமிழ் மக்களுக்கு எதிராக அரங்கேற்றப்படும் ஒரு திட்டம்' என்ற தொனியிலேயே படங்களுடன் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இன்றைய உள்ளூர், வெளியூர் பிரதான தமிழ் ஊடகங்கள் முற்போக்கான அரசியல் கருத்துக்களை மக்களிடையே கொண்டு செல்வதற்கு பதிலாக, பிற்போக்கு தமிழ் தேசியவாதக் கருத்துக்களை மீண்டும் மீண்டும் விதைப்பது போலவே, முன்னெடுக்கப்படும் இவ்வாறான அபிவிருத்தி திட்டங்களுக்கும் எதிர்மறையான கருத்துக்களையே தெரிவித்து வருகின்றன. இன்றைக்கு எந்தவொரு நாட்டிற்கும் மின்சாரசக்தி என்பது மிக மிக அத்தியாவசியமானது, அதிலும் சுற்றுப்புறச் சூழலுக்கும் சுகாதாரத்திற்கும் தீங்கு விளைவிக்காத, இயற்கை மின்சாரசக்தி எவ்வளவு முக்கியமானது என்பதை இந்த ஊடகங்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இலங்கை 53% மின்சகக்தியை அனல் மின் நிலையங்கள் வாயிலாகவும், 43% மின்சகக்தியை நீர் வீழ்ச்சியிலிருந்தும் பெற்றுக் கொள்கின்றது. அனல் மின் நிலையங்களுக்கான எரிபொருளாக நிலக்கரி, டீசல், ஒயில் என்பன பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வரட்சியான காலப்பகுதியில் நீர் வீழ்ச்சி மின் வழங்கலில் பாதிப்பு ஏற்பட்டு அடிக்கடி மின்வெட்டு அமுலில் இருக்கும். அப்போது எரிபொருள்(டீசல்) மூலம் இயங்கும் மின்பிறப்பாக்கிகள் மூலமாகவே அத்தியாவசியத் தேவைக்கான மின்சாரத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இத்தகைய மின் பிறப்பாக்கிகளிலிருந்தும் அனல் மின் நிலையங்களிலிருந்தும் வெளியேறும் புகைகளால் சுற்றுச்சூழல் மாசடைகின்றது.

ஒரு யூனிட் (kWh) மின்சாரத்தை உற்பத்தி செய்ய 1.25 கிலோ நிலக்கரி எரிக்கப்படுகிறது. 1.25 கிலோ நிலக்கரியை எரிக்கும்போது 3.5 கிலோ காபனீர் ஒக்சைட் ($CO_2$) வாயு வெளியேறுகின்றது. அளவுக்கதிமான காபனீர் ஒக்சைட் வாயுவின் வெளியேற்றத்தால் பூமியின் வெப்பநிலை படிப்படியாக உயர்ந்த வண்ணமுள்ளது. எனவே சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதோடு, வரட்சிக்காலத்தில் ஏற்படும் மின்சாரப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கும் இயற்கையாகக் கிடைக்கும் சூரியசக்தியிலிருந்தும் காற்றிலிருந்தும் மின்னுற்பத்தி செய்வதே சிறந்த வழி.

காற்றாலைகள் மக்கள் குடியிருப்புகளிலிருந்து குறைந்தது 500 மீட்டருக்கு அப்பால் அமைக்கப்பட வேண்டும். காற்றாடிகள் சுற்றும் போது அதிலிருந்து எழும் ஒலிகள் மக்களைப் பாதிக்காதவாறு இருக்க வேண்டுமென்பதற்காகவே இந்த விதிமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆனால் மறவன்புலவில் அமைக்கப்படவுள்ள நான்கு காற்றாலைகளில் இரண்டினை, மக்கள் குடியிருப்புகளுக்கு மிக அண்மையாக அமைக்கத் திட்டமிடப்பட்டது. மறவன்புலவு மக்கள் இதனை எதிர்த்ததைத் தொடர்ந்து, இரண்டு காற்றாலைகளை 500 மீட்டருக்கப்பால் நகர்த்துவதற்கு LTL நிறுவனம் இணங்கியுள்ளதாக கடைசியாகக் கிடைக்கும் செய்திகள் மூலம் தெரிய வருகின்றது.

உலகம் முழுவதும் காற்றாலை மின்சாரம் என்பது பிரபலமாகி வருகிறது. காற்று அதிகம் வீசக்கூடிய நாடுகள் காற்றாலை மூலமாக அதிக அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்வது பற்றி ஆலோசித்து வருகின்றன. காற்றின் வேகத்தில் காற்றாடிகளை சுழலச் செய்து, அதன் மூலமாக ஜெனரேட்டரில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இந்த தொழில்நுட்பம் மிகவும் சுலபமானது மட்டுமல்லாமல் சிக்கனமானதும் கூட என்பதால், இந்த மின் உற்பத்திக்கு உலகெங்கிலும் வரவேற்பும் அதிகரித்துள்ளது.

காற்றாலை மூலமாக மின்னுற்பத்தி செய்யப்படும்போது சுற்றுச்சூழலுக்கான பாதிப்பு என்பது மிகக்குறைவானதே. பறவைகள் காற்றாடிகளில் அடிபட்டு இறக்க வாய்ப்புள்ளதென கூறப்பட்டாலும், அவைகள் காற்றாலைகளை விலகிப் பறப்பதற்கு பழக்கப்படுத்திக் கொள்ளுமென்றே பிபிசியில் வெளியான ஆய்வொன்று தெரிவிக்கின்றது. காற்றாலைகளை அமைக்கும் போதே அதிகம் முதலீடு தேவை. நிலக்கரி, டீசல், ஒயில் போன்ற எரிபொருளுக்கு செலவு செய்வது மாதிரி இந்த மின்சக்திக்கு செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதால், இந்த மின்சக்திக்கு வரவேற்பு அதிகரித்து வருகிறது. உலகில் காற்றாலை மின்னுற்பத்தியில் சீனா முதலிடத்திலும் அமெரிக்கா இரண்டாமிடத்திலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

எமக்கு அண்டை நாடான இந்தியாவின் மின்னுற்பத்தியில் காற்றாலை மூலம் தயாரிக்கப்படும் மின்சாரம் முக்கிய பங்கு வகிக்கிறது. அந்தவகையில் நாடு முழுவதிலும் சுமார் 34,000 இற்கும் மேற்பட்ட காற்றாலைகள் உள்ளன. இதில் தமிழகத்தில் மாத்திரம் 12,000 இற்கும் அதிகமான காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. தமிழகமே காற்றாலை மின்னுற்பத்தியில் இந்தியாவில் முதலிடத்தை வகிக்கின்றது. தமிழகத்து காற்றலைகள் மொத்தம் 7,850 மெகாவாட் (MW) மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை. எனினும் காற்றின் வேகத்தைப் பொறுத்து குறைந்தபட்சமாக 5,000 மெகாவாட் வரை உற்பத்தியாகும். நாளொன்றுக்கு 15,000 மெகாவாட்டுக்கும் அதிகமாக மின்நுகர்வு உள்ள தமிழகத்திற்கு, குறைந்தது 30 சதவீத மின்சாரத் தேவையினை காற்றாலைகள் பூர்த்தி செய்து வருகின்றன.

காற்றாலைகள் அமைக்கப்படுவது தொடர்பாக மறவன்புலவு மக்களின் எதிர்ப்புக்கு பல நியாயப்பாடுகள் இருக்கலாம். அவற்றினை LTL நிறுவனம் கட்டாயமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதேவேளையில் காற்றாலைகள் மூலமாக கிடைக்கப்பெறும் மின்சக்தியை முதலில் வடபகுதி மக்களே நுகரப் போகிறார்கள் என்ற புரிந்துணர்வுடனேயே இத்திட்டத்தை அரசியல்வாதிகளும் ஊடகங்களும் மக்களும் அணுக வேண்டும்.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:


வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**


# 1962 ஆட்சிக் கவிழ்ப்புச் சதியும் அதன் முறியடிப்பும்



Mrs. Sirimavo Bandaranaike



Sir Oliver Goonatillake



Felix Dias R. Bandaranaike

சுதந்திரமடைந்து 15 ஆண்டுகள் கூட முடிந்திராத காலம் அது! அப்போதிருந்த ஜனநாயக ஆட்சியைக் கவிழ்த்து ஆட்சி அதிகாரத்தை தம் வசப்படுத்திக் கொள்வதற்காக இராணுவத்திலிருந்த சிலரும் காவல்துறையிலிருந்த சிலரும் கூட்டாக முயன்ற அந்தச் சதி, முறியடிக்கப்பட்டது இலங்கையின் அரசியல் வரவாற்றில், அதிர்வு மிக்க பக்கமாக இருக்கின்றது. 1962 ஆம் ஆண்டில் நடைபெற்ற இக்கதையை நீங்கள் அறிவீர்களா?

### ஆட்சிக்கவிழ்ப்புச் சதி தோல்வி அடைந்ததன் தொடக்கப் புள்ளி

1962 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அதிகாலையில், கொழும்பு நகரின் காவல்துறை சுப்பிரெண்டண்ட் அதிகாரியான ஸ்டான்லி சேனாநாயக்க, நடைப்பயிற்சியை மேற்கொண்டு கொண்டிருந்தார். அன்று அவருடன் பிரதி காவல்மா அதிபரான சி.சி. திஸாநாயக்கவும் இணைந்து கொண்டிருந்தார். நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் போது, திஸாநாயக்க, ஸ்டான்லியிடம் ஓர் உதவியைக் கோரினார். அன்றைய தினம் இரவில் இரகசியத் திட்டம் ஒன்று அமுற்படுத்தப்படவுள்ளதாகவும், கொழும்பு நகரத்தின் பிரதான காவல் அதிகாரி என்ற வகையில், ஸ்டான்லியின் ஒத்துழைப்பு அதற்கு அவசியம் என்றும் திஸாநாயக்க குறிப்பிட்டார். மேலும், அந்த இரகசியத் திட்டம் என்ன என்பதும் காலிமுகத்திடலில் வைத்து வெளிப்படுத்தப்பட்டது.

நடைப்பயிற்சியை முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்த ஸ்டான்லி சேனாநாயக்க, பதற்றமாக காணப்பட்டார். இதனை அவதானித்து விசாரித்த அவரது மனைவி மாயாவிடம், அனைத்து உண்மைகளையும் மறைக்காமல் சொல்லிவிட்டார். இந்த மாயா யார் என்றால், அப்போதைய பிரபல அரசியல்வாதியும் நாடாளுமன்ற உறுப்பினருமாயிருந்த பட்ரிக் டி சில்வா குலரத்னவின் மகள் ஆவார். இந்த சதித்திட்டத்தை தம் கணவரிடமிருந்து கேள்வியுற்ற உடனேயே, மாயா தமது தந்தை பட்ரிக் டி சில்வா குலரத்னவுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து, ஒன்று விடாமல் அனைத்தையும் சொல்லிவிட்டார். 1962 ஆம் ஆண்டு ஆட்சிக்கவிழ்ப்புச் சதி தோல்வி அடைந்ததன் தொடக்கப் புள்ளி இது தான்.

### பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க பெரிதும் அதிர்ச்சி அடைந்தார்

இதனையடுத்து, குலரத்னவால் அப்போதைய காவல்மா அதிபர் வோல்ட்டர் அபேயக்கோனுக்கு, இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டன. இதனையடுத்து, அப்போது உள்ளகப் பாதுகாப்பு விவகாரங்களைக் கவனித்து வந்த குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு இந்தச் சதித்திட்டம் குறித்த விபரங்கள் கொண்டு செல்லப்பட்டன.
பிரச்சினையின் ஆழத்தை நன்கு புரிந்து கொண்ட குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதானி எஸ். ஏ. திசாநாயக்க, பிரதமர் சிறிமாவோவின் பிரதான ஆலோசகரும் நிதி அமைச்சருமான ஃபீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவுக்கும் (Felix Dias Bandaranaike) இது குறித்து தெரிவித்தார். இதனையடுத்து ஃபீலிக்ஸ் டயஸ் உடனடியாக அலரி மாளிகைக்குப் புறபட்டுச் சென்றார்.

தகவலைக் கேள்விப்பட்ட பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க பெரிதும் அதிர்ச்சி அடைந்தார். ஏனெனில், இலங்கையில் இவ்வாறானதொரு ஆட்சிக்கவிழ்ப்புச் சதி இடம்பெறுமெனவும் பாதுகாப்புத்தரப்பினரே அதில் ஈடுபடுவார்களெனவும் எவருமே கனவில் கூட எண்ணியிருக்கவில்லை. தென்னாசிய நாடுகளில், பாகிஸ்தானில் மாத்திரமே அவ்வாறானதொரு நிலமை நிலவிக்கொண்டிருந்தது. சதியை முறையடிக்கும் திட்டங்கள் அலரி மாளிகையில் வைத்து தீட்டப்பட்டன. ஃபீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவின் நேரடி பணிப்பின் கீழ் அதிவிரைவாக காரியங்கள் நடைபெற்றன.

### அன்றிரவு வெளிவந்த உண்மைகள்

ஆட்சிக்கவிழ்ப்பில் தொடர்புடையவர்களென சந்தேகிக்கப்படும் நபர்களின் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதில் கனிஷ்ட நிலையில் உள்ள இராணுவ மற்றும் காவல்துறை அலுவலர்களை அவர் உடனடியாக அலரிமாளிகைக்கு தருவித்தார். அவர்களிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் ஃபீலிக்ஸ்

டயஸ் பண்டாரநாயக்கவும் தொடர்ச்சியாக விசாரணை நடத்தினர். சதித்திட்டத்தை வகுத்த இராணுவ மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளின் உண்மையான திட்டம் என்ன என்பதுவும், என்ன நடவடிக்கைகளை அன்றிரவு முன்னெடுக்க இருந்தனர் என்பதுவும் வெளிவந்தன.

ஆட்சிக்கவிழ்ப்புச் சதியின் இராணுவப் பாகத்திற்கு Colonel Fredrick C. de Saram தலைமை தாங்கியமை தெரியவந்தது. அதிர்ச்சியான விஷயம் என்னவென்றால், சிறிமாவோவின் கணவரும் மறைந்த பிரதமருமான S.W.R.D. பண்டாரநாயக்கவின் உறவினரே இந்த Colonel Fredrick C. de Saram. டி.சேரம் உடன் இராணுவத்துணைப்படையின் அதிகாரி Colonel Maurice De Mel ஐயும் இதில் இணைந்திருந்தார். ஆட்சிக்கவிழ்ப்புச் சதியின் காவல்துறைப் பாகத்துக்கு பிரதிக் காவல்துறை மாஅதிபர் சி.சி.திஸாநாயக்க மற்றும் ஓய்வுபெற்ற காவல்துறை மாஅதிபரான சிட்னி டி.சொய்ஸா ஆகியோர் தலைமை தாங்கியிருந்தனர்.

ஆட்சிக்கவிழ்ப்பானது, இலங்கை சிவில் சேவையில் கடமையாற்றி வந்த Douglas Liyanage இனால் திட்டமிடப்பட்டதென்பது வெளிப்படுத்தப்பட்டது. சிறிது காலத்துக்கு முன்னரே கடற்படையிலிருந்து விலகியிருந்த Rear Admiral Royce de Mel இதற்கு ஆதரவளித்தாரெனக் கூறப்பட்டது. இராணுவத்தின் 3 ஆவது ரெஜிமென்ட் மற்றும் துணைப்படையின் விமான எதிர்ப்பு ரெஜிமென்ட் உள்ளிட்ட படைப்பிரிவுகள் இந்த ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியில் தொடர்புடையவை எனக் கூறப்பட்டன.

**சதியை முறியடிப்பதன் முதலாவது நடவடிக்கை**

அலரி மாளிகையிலிருந்து இந்த சதியை முறியடிப்பதன் முதலாவது நடவடிக்கையாக பெத்தேகம தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் Neal de Alwis கைது செய்யப்பட்டு, காலி காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார். இதனையடுத்து, சதிகாரர்களில் ஒருவரான சி.சி. திஸாநாயக்கவுக்கு வந்த ஒரு தொலைபேசி அழைப்பினூடாக சதித்திட்டம் கைவிடப்பட்டதென தெரிவிக்கப்பட்டது. காவல்துறைத் தலைமையகத்தின் இரவு நேரப் பொறுப்பதிகாரியான V.T.Dickman மாற்றப்பட்டு, வேறொருவர் நியமிக்கப்பட்டார்.

அன்றைய தினம் தனது நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. இரவு 11.15 அளவில் நாட்டின் அனைத்து காவல்நிலையங்களுக்கும் இந்தச் சதித்திட்டம் குறித்து அறிவிக்கப்பட்டது. குற்றப்புலனாய்வுப் பிரிவே இந்த அறிவித்தலைச் செய்தது. அலரி மாளிகையைச் சுற்றிலும் பாதுகாப்புக்காக, கடற்படையினரே நிறுத்தப்பட்டனர். பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் நேரடி உத்தரவின்படி, திஸாநாயக்க மற்றும் போக்குவரத்து காவல்துறை உயர் அதிகாரி பெடி ஜோன்பிள்ளை ஆகியோர் அந்த நள்ளிரவில் கைது செய்யப்பட்டனர்.

**சிறிமாவோ பண்டாரநாயக்கவை சிறைக்குள் தள்ள**

28 ஆம் திகதி புதிய நாள் ஒன்று விடிந்தது. சிறிமாவோ பண்டாரநாயக்கவை அலரிமாளிகைக்குள்ளேயே வீட்டுச்சிறைக்குள் தள்ளி, இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றும் சதி திட்டம் முற்றாக முறியடிக்கப்பட்டது. சதித்திட்டத்தின் சூத்திரதாரிகளான Colonel F. C. de Saram , Colonel Maurice de Mel மற்றும் Rear Admiral Royce de Mel ஆகியோருக்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட Colonel F. C. de Saram நேராக அலரி மாளிகைக்கே கொண்டுவரப்பட்டார். Colonel de Melம் கைது செய்யப்பட்டார். ஆனால் Rear Admiral Royce de Mel தலைமறைவானார். அன்றைய நாள் ஞாயிறு மதியம் ரேடியோ சிலோன் வானொலி ஊடாக விசேட செய்தியறிக்கை ஒன்றின் மூலம், இந்த ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி குறித்தும் அதில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டமை குறித்தும் நாட்டு மக்கள் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது.

**நன்றி: roar தமிழ்**

# தினக்குரல் பத்திரிகையின் விசமத்தனம்!

கொழும்பிலிருந்து வெளியாகும் தினக்குரல் பத்திரிகையின் மின்பதிப்பை (e-paper) தினசரி பார்ப்பவர்கள் அங்கு ஒரு விசமத்தனம் இருப்பதைக் கண்டுகொள்ள முடியும்.

அதாவது, இலங்கை ஜனாதிபதித் தேர்தல் நொவம்பர் 16ஆம் திகதி நடைபெற்றது. அது நடைபெறுவதற்கு முன்னர் எதிரணியின் வேட்பாளராகப் போட்டியிட்ட கோத்தபாய ராஜபக்சவுக்கும் மற்றும் ராஜபக்ச குடும்பத்தினர் அனைவருக்கும் எதிராக ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அணியினர் மட்டுமின்றி, பல ஊடகங்களும் முன்னின்று பல பொய்யானதும் விசமத்தனமானதுமான பிரச்சாரங்களை முன்னெடுத்தனர்.

இந்தப் பிரச்சாரங்களில் சிங்கள, ஆங்கில ஊடகங்களை விட தமிழ் ஊடகங்களே முன்னணியில் நின்றன. முக்கியமாக கொழும்பிலிருந்து வெளியாகும் தினக்குரல், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு சொந்தமான உதயன் என்பனவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

அந்த வகையில் தேர்தல் தினத்துக்கு சில நாட்களுக்கு முன்னர் நொவம்பர் 02 ஆம் திகதி வெளிவந்த தினக்குரல் பத்திரிகையில் முன்பக்க தலைப்புச் செய்தி ரணில் விக்கிரமசிங்கவின் படத்துடன் இவ்வாறு வெளிவந்திருந்தது.

**“ராஜபக்சாக்களுக்கு ஐ.எஸ். ஊடன் தொடர்பா?”**
**அல் பக்தாதியின் கொலையை கண்டிக்காதது ஏன்? ரணில் கேள்வி**

இந்தத் தலைப்பின் நோக்கம் என்னவெனில், ஒரு பக்கத்தில் ராஜபக்சாக்கள் முஸ்லீம்களுக்கு எதிரானவர்கள் எனப் பிரச்சாரம் செய்துகொண்டு, மறுபக்கத்தில் ஈஸ்டர் தின குண்டு வெடிப்பால் விசனத்தில் இருந்த கிறிஸ்தவ மக்களை ராஜபக்சாக்களுக்கு எதிராகத் தூண்டிவிடும் வகையில் அவர்களுக்கு ஐ.எஸ். என்ற சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்பு எனக் காட்டுவதாகும்.

இந்த விசமத்தனமான செய்தியை தினக்குரல் பிரசுரித்த விடயம் ஒருபுறமிருக்க, மேலதிக விசமத்தனமான

**தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...**

# நவீன இந்தியாவின் சிற்பி அண்ணல் அம்பேத்கர்



இந்தியாவின் அரசியல் சாசனத்தை உருவாக்கித் தந்த சட்டமேதை அண்ணல் அம்பேத்கரை, இந்தச் சமூகம் வெறும் தலித் தலைவராகச் சுருக்கிவிட்டது. உண்மையில் அம்பேத்கர், பொதுச் சமூகத்தின் முன்னேற்றத்துக்குதான் அதிகம் பங்களித்திருக்கிறார். கிடைத்த சிறிய வாய்ப்புகளில்கூட, பொருளாதாரம், அரசியலமைப்புச் சட்டம், தேர்தல் சீர்திருத்தங்கள், தொழிலாளர் நலன், விவசாயம், நதிநீர் மேலாண்மை, மின்சார உற்பத்தி, சமூகச் சீர்திருத்தம், பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு, வெளியுறவுக் கொள்கை, அறிவியல் என ஒரு தேசத்தை நிர்மாணிக்கத் தேவையான அனைத்தையும் அவர் செய்திருக்கிறார்.

‘சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமராக ஜவஹர்லால் நேருவைவிட வல்லபபாய் படேல் பொறுப்பேற்றிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்’ என ஒருசாரார் விவாதித்துக்கொண்டிருக்கின்றனர். என்றாலும் படேலைவிட நேருவே சிறப்பானவர் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. ஆனால், இவர்கள் எல்லோரையும்விட அண்ணல் அம்பேத்கரே இந்தியாவின் சிறந்த முதல் பிரதமராக இருந்திருப்பார். ஜனநாயகம் என்பது வெறும் தேர்தல்முறை மட்டுமல்ல என்பதை அவர் பலமுறை சுட்டிக்காட்டி இருந்தாலும், இந்தியாவுக்கு ஏற்ற தேர்தல்முறையைத் தேர்வு செய்வதில் கிட்டத்தட்ட கால் நூற்றாண்டுக்குமேல் செலவு செய்தார் அம்பேத்கர். சவுத்பரோ குழு, சைமன் குழு எனப் பல குழுக்களில் சாட்சியம் அளித்த அவர், இந்தியாவின் தேர்தல் தொடர்பான சட்டங்களையும் உருவாக்கினார். சட்ட அமைச்சராக அவர் முன்னெடுப்பில் உருவானதுதான் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம். அந்தச் சட்டங்கள்தான் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க இன்றுவரை பயன்பாட்டில் இருக்கிறது.

ஒரு மனிதன் மதிப்பு என்பதை அடைய பல நாடுகளின் குடிமக்கள், பல்வேறு போராட்டங்கள், உயிரிழப்புகளைச் சந்தித்துப் பெற்றபோது நாம் குடியரசாக மாறிய நாள்முதல் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கக் காரணமாகத் திகழ்ந்தார் அம்பேத்கர்.

**ஏ பி ராஜசேகரன்**

இந்தியப் பொருளாதாரம் குறித்து அம்பேத்கருக்கு மாணவப் பருவம் முதலே ஆர்வம் இருந்தது. அவரின் மூன்று ஆய்வேடுகளும் இந்தியப் பொருளாதாரத்தைக் குறித்துதான். இந்தியாவுக்கு ஏற்ற பொருளாதார முறையானது, காலத்துக்கு ஏற்றாற்போல, நாட்டின் வளர்ச்சிக்குத் தகுந்தாற்போல மாறுவதைத்தான் அவர் விரும்பினார். நிலமற்ற அல்லது குறைந்த நிலமுடைய விவசாயிகளுக்குக் கூட்டுறவு விவசாயம் பயனளிக்கும் என்று நினைத்த அம்பேத்கர், விவசாயக் குடும்பங்களில் உருவாகும் உபரித் தொழிலாளர்களுக்காக இந்தியா வெகுவேகமான தொழில்வளர்ச்சியை நோக்கிச் செல்ல வேண்டும் என்று எடுத்துரைத்தார். ‘முக்கியமான துறைகள் தேசியமயமாக்கப்பட வேண்டும்’ என்கிற நேருவின் கருத்துக்கு அவர் துணையாக இருந்தார். அதேவேளையில் நாட்டின் வளர்ச்சிக்குத் தனியார் துறையின் பங்களிப்பும் அவசியம் என்று கருதினார். ஆனால், தனியார் துறை எந்தவொரு கடிவாளமும் இல்லாமல் இருக்கக் கூடாது ஏனென்றால், அவற்றின் முதலாளிகள் பெறும் கட்டற்ற சுதந்திரம் தொழிலாளர்களை ஒடுக்கிவிடும் என்று கருதினார்.

வைஸ்ராய் கவுன்சிலில் உறுப்பினராக அம்பேத்கர் இருந்தபோது, இந்தியாவின் முதல் நீராதாரக் கொள்கையை உருவாக்கி வளர்ச்சிசார்ந்த பன்முகப் பயன்களை அளிக்கக்கூடிய நீர் மேலாண்மைத் திட்டங்களை உருவாக்கினார். அவரின் முயற்சியால் உருவானதுதான் தாமோதர் பள்ளத்தாக்கு திட்டம், ஹிராகுட், சோன் பள்ளத்தாக்கு திட்டம் போன்றவை. இந்தியாவின் முதல் மின்சார ஆணையத்தை அமைத்து, ‘அதிக உற்பத்தியும் குறைந்த விலையுமே இந்தியாவின் மின்சாரக் கொள்கையாக இருக்க வேண்டும்’ என்று அவர் குறிப்பிட்டார். அவருடைய பொருளாதாரச் சிந்தனைகள் இன்றும் மிக அவசியமானதாக இருக்கிறது எனப் பொருளாதார மேதைகள் கருதுகின்றனர். சமூகச் சீர்திருத்தங்களை அம்பேத்கர் அளவுக்குச் சிந்தித்து செயல்படுத்தியவர்கள் நவீன இந்தியாவில் யாரும் இருக்க முடியாது.

வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பழக்கவழக்கங்களைக் கொண்டிருந்த இந்துச் சட்டங்களை ஒழுங்குபடுத்தி, அதில் திருத்தம் செய்து அவர் உருவாக்கிய மாதிரிகள்தான் பின்னர் சட்டமாக மாறியது. பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை, விவாகரத்து உரிமை எனப் பல்வேறு உரிமைகளை மகளிருக்காகப் பெற்று தந்தார் அம்பேத்கர். அரசியலமைப்புச் சட்டத்தை எழுதியதுடன், அதைச் சமூக நீதி சார்ந்ததாகவே வடிவமைத்தார். பழங்குடியினர், சிறுபான்மையினர், தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர் என அனைவருக்குமான உரிமைகளையும் பாதுகாப்பையும் அந்தச் சட்டத்தின் மூலம் அளித்தார்.

இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை எப்படியிருக்க வேண்டும் என்று அவருக்கு ஒரு மிகப்பெரிய கனவு

இருந்தது என்று கூறினால் அது மிகையாகாது. இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை முதலில் நாட்டுக்கு நன்மைபயப்பதாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். 'இந்தியா ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி, தன்னை வலிமையாக்கிக்கொள்ள வேண்டும் அப்போதுதான் பிற நாடுகள் நம்மை மதிப்பார்கள்' என்று அம்பேத்கர் வலியுறுத்தினார். ஐ.நா சபையில் சீனா நிரந்தர உறுப்பினராக இடம்பெறுவதற்கு இந்தியாவின் முனைப்பைக் கடுமையாக அவர் கண்டித்ததுடன், 'இந்தியாவைச் சீனா தாக்கும்' என்பதை ஒரு தீர்க்கதரிசியாக 1954-ம் ஆண்டிலேயே உரைத்தவர். பத்து ஆண்டுகள் கழித்து, 1964-ல் இந்தியா மீது போர் தொடுத்தது சீனா. இன்றுவரை ஐ.நா பாதுகாப்பு சபையில் தனது வீட்டோ (veto) அதிகாரத்தை இந்தியாவுக்கு எதிராகச் சீனா பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

காஷ்மீர் குறித்த அவரின் பார்வை இன்றும் தேவையாக இருக்கிறது. கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகளில் தீவிர அக்கறை காட்டினார் டாக்டர் அம்பேத்கர். முக்கியமாக ஆரம்பக்கல்வி கட்டாயமாக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அன்று இருந்த பொருளாதாரச் சூழ்நிலையில் அது சாத்தியமில்லாததால், கட்டாயக் கல்வி ஒரு தேசத்தின் முக்கியக் கொள்கையாக இருக்க வேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெறச் செய்தார். கல்வியின் அவசியம் கருதி அவரே இரண்டு முக்கியக் கல்வி நிலையங்களைத் திறந்து, அவர் நினைத்தது போன்று, அந்தக் கல்வி நிறுவனங்களை நடத்தி வந்தார்.

'மாணவர்கள் முக்கியமாக அறிவியல் படிப்புகளில் அதிக கவனம் செலுத்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டு சமூகத்துக்கு பங்களித்திட வேண்டும்' என்று தொடர்ச்சியாக அறிவுறுத்தினார். உலகின் சிறந்த கண்டுபிடிப்புகளை இந்தியா பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று விரும்பியதோடு மட்டுமல்லாமல், நம் நாட்டு மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று படிப்பதற்கு அரசு தாராள உதவித்தொகை அளித்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். பெரும் படிப்பாளியான அவர், கல்வியில் நூலகம் ஒரு முக்கிய அங்கம் வகிக்க வேண்டும் என்று பல்கலைக்கழகங்களுக்கு அறிவுரை வழங்கினார்.

நிர்வாகம், சட்டம், பொருளாதாரம், தொழில்துறை, சமூகம், வெளியுறவு, தேசப் பாதுகாப்பு, தேச ஒற்றுமை, கல்வி என அண்ணல் அம்பேத்கரின் பங்களிப்பு அபாரமானது, தீர்க்கதரிசனத்துடன் கூடியது. அம்பேத்கர், இந்தியாவின் சிறந்த பிரதமராக இருந்திருப்பார். அப்படி இருந்திருந்தால், நம் நாடு தற்போது ஒரு சமத்துவமான, வளர்ச்சியடைந்த இந்தியாவாக உருவாகியிருக்கும்.

**(டிசம்பர் 6ந் திகதி அம்பேத்கர் நினைவு தினம்)**

# கண்ணை விற்று சித்திரம் வாங்குவது தவறு!

**ம**ண் அகழ்வதற்கும் அதைக் கொண்டு செல்வதற்கும் இருந்த தடையை ஜனாதிபதி நீக்கியதைத் தொடர்ந்து வடக்கு கிழக்கின் பல இடங்களில் சட்ட விரோத மணல் கொள்ளையர்கள் தங்களது கைவரிசையைக் காட்டி வருவதாகத் தெரிகிறது. இந்த சட்ட விரோத மணல் கொள்ளையைத் தடுப்பதற்கு மக்கள் ஆங்காங்கே போராட்டங்களில் ஈடுபடுவதையும் காண முடிகிறது.

ஜனாதிபதி மணல் அகழ்வதற்கு இருந்த தடையை ஏன் நீக்கினார் என்பதற்கு அரசாங்கம் இதுவரை விளக்கம் எதனையும் அளித்ததாகத் தெரியவில்லை.

எந்த வகையான கட்டிடங்கள் கட்டுவதானாலும் கல், மண், சீமெந்து என்பன மூலப்பொருட்கள் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதில் கல் மலைகளில் இருந்தும் புறம்போக்கான நிலங்களிலிருந்தும் கிடைக்கிறது. இவற்றை எடுப்பதால் மக்களுக்கு பெரிய பாதிப்பு எதுவும் இல்லை. சீமெந்து அதற்கான தொழிற்சாலைகளில் அல்லது வெளிநாட்டு இறக்குமதிகளில் இருந்து கிடைக்கிறது. ஆனால் மணல் விடயம் வேறு.

மணல் மக்கள் வாழும் கிராமங்கள், ஆற்றோரங்கள், வனப்பகுதிகள் போன்ற இடங்களில் இருந்தே அகழ்ந்து எடுக்கப்படுகிறது. இப்பகுதிகள் மக்களின் வாழ்வுடன் இணைந்த, அவர்களின் உயிர்நாடியாகிய பகுதிகள். இந்தப் பகுதிகளில் கண்டபாட்டுக்கு மண் அகழ்ந்தெடுக்கப்பட்டால், தரையின் தோற்றத்தில் மாறுபாடு ஏற்படுவதுடன், சுற்றுச்சூழலும் பாதிக்கப்படும். எனவேதான் தமது வாழ்வை அழிக்கும் இந்தச் செயலுக்கு எதிராக மக்கள் போராடப் புறப்பட்டுள்ளார்கள்.

எனவே, மண் அகழ்வதில் சில கட்டுப்பாடுகளை அரசாங்கம் விதிப்பது அவசியமானது. அதாவது, இயற்கைச் சூழலுக்கு பாதிப்பு வராத சில தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் மட்டும் மண் அகழ்வதற்கு அனுமதிக்க வேண்டும். அந்த அகழ்வைச் செய்பவர்கள் அரசாங்க அனுமதியைப் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட தொகை மண்ணுக்கு கட்டுப்பாட்டு விலையும் நிர்ணயிக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் அபிவிருத்தி வேலைகளுக்கென கண்டபாட்டுக்கு மண் அகழ அனுமதிப்பது, 'கண்ணை விற்று சித்திரம் வாங்கியதற்கு' ஒப்பானதாகும்.

இன்னுமொரு வழியையும் அரசாங்கம் பரிசீலிக்கலாம். உலகின் பல பாலைவனப் பிரதேசங்களில் ஏராளமான மணல் குன்றுகள் இருக்கின்றன. அங்கிருந்து மண்ணை இறக்குமதி செய்வது குறித்து அரசாங்கம் பரிசீலிக்கலாம். சில நாடுகள் குடிதண்ணீரை இறக்குமதி செய்வது போன்றதே இதுவும். சற்று செலவு கூடுதலாக இருக்கும், அவ்வளவுதான். அத்தியாவசிய தேவை என்றால் செலவை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை.

பூமி உள்ளளவும் நிலைத்திருக்க வேண்டிய மலைகளை உடைப்பது, காடுகளை அழிப்பது, மணலை அகழ்வது போன்றவற்றால், மனிதன் தன்னைத்தானே அழித்துக்கொள்கிறான்.


**4ம் பக்கத்தொடர்ச்சி...**

செயல் என்னவெனில், 02ஆம் திகதி முதல் இன்றுவரை இந்தப் பதிப்பை தினக்குரல் நிர்வாகம் தனது மின் பதிப்பு பக்கத்தில் தொடர்ந்து வைத்திருப்பது தான். இதன் நோக்கம் என்ன?

இப்பொழுது புரிகிறதல்லவா, ஐ.தே.க. ஆட்சியின் கீழ் ஊடக சுதந்திரமும் தர்மமும் எப்படிக் கொடிகட்டிப் பறந்தன என்பது என்று.

# தனக்கென ஓர் அரசியல் சித்தாந்தம் கொண்ட டக்ளஸ்

இந்தியாவில் வாழும் தமிழ் அகதிகள் விரைவில் தாயகம் திரும்பி இயல்பு வாழ்வுக்கு திரும்ப வேண்டும் என்பதில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கரிசனையுடன் இருப்பவர். அண்மையில் அவருக்கு கிடைத்த மறுவாழ்வு அமைச்சர் பதவியை ஏற்ற ஓரிரு நாட்களில் தமிழ் அகதிகள் திரும்பி வருவதற்கு முக்கிய தேவையாக இருக்கின்ற ராமேஸ்வரம் – மன்னார் கடல் மார்க்க கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக செயற்பாடுகளை ஆரம்பித்த வேளை அவர் பதவி இல்லாமல் போனது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.



இந்தியாவில் வாழும் தமிழ் அகதிகள் பற்றி நான் தொடர்ந்து செய்து வருகின்ற கள ஆய்வுகளின் அறிக்கைகளை அவரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் அண்மையில் அவரை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரின் அலுவலகத்தில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவரை சந்திக்க சென்றவேளை, அவரை நேரில் சந்திப்பதற்காக நீண்ட கியூவில் பொது மக்கள் இருந்தனர். முதலில் அவர்கள் எல்லோரும், அவர் சேர்ந்த கட்சி ஆதரவாளர்கள் அல்லது அவருடைய தொகுதி மக்களாக இருப்பார்கள் எனத்தான் எதிர்பார்த்தேன். ஆனால் அங்கு வந்து கியூவில் காத்திருப்பது வடபகுதியில் இருந்து வெவ்வேறு இடங்களை சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்தது.

நான் அவரை சந்திக்க சென்றவேளை, உடனடியாக என்னுடன் கதைப்பதற்கு முன்வந்தபோது, நீண்ட நேரமாக காத்திருந்தவர்களை பார்க்கும்படியும், நான் தாமதிக்க முடியும் என்று கூறியதனால் வந்தவர்களை பார்த்து உரையாடினார். தொண்டர் ஆசிரியர்களின் நியமன பிரச்சினை, தட்டி வேன் பிரச்சினை என்று குழுக்களாக வந்தவர்களும், இளைஞர்கள், மாணவர்கள் போன்ற தனிப்பட்டவர்களையும் அவர் அவர்களுக்கான தேவையான நேரம் ஒதுக்கி பார்ப்பது மாத்திரமன்றி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அந்த இடத்தில் வைத்தே தொலைபேசியில் தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு தீர்வுகளையும் காண முயற்சிக்கிறார். வட மாகாணத்தில் வேறு பல பாராளுமன்ற பிரதிநிதிகள் இருக்கின்றார்கள், ஆனால் இவர் இப்போது அமைச்சரும் இல்லை. ஆளும் அரசியல் கட்சியிலும் இல்லை, அப்படியென்றால் இவருக்கு ஏன் இந்த கியூ என்பதை சற்று அங்கிருந்து அறிந்துகொள்ள முற்பட்டேன்.

டக்ளஸ் தேவானந்தா தமிழ் அரசியல் துறையில் நீண்ட காலம் இருப்பதினால் அவர் முழு இலங்கைக்கும் தெரியப்பட்டவர் என்பது உண்மை. இருந்தாலும், அவரின் அரசியல் கொள்கையை விமர்சிப்பவர்களும் இருக்கின்றார்கள். அவர் பாராளுமன்ற உறுப்பினராக தெரியப்பட்ட காலத்தில் இருந்து, பெரும்பான்மை அரசியல் தலைமைகளுடன் முட்டி, மோதி, அரசியல் நடத்த வேண்டுமென்பதில் எப்போதும் உடன்பட்டது இல்லை. மக்களுக்கு வேண்டிய அவசியத் தேவைகளை செய்து கொடுக்க வேண்டுமென்பதில் அசையாத பிடிவாதம் கொண்டவர் என்பதினால் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அரசுடன் சேர்ந்து மக்களுக்கு சேவையாற்றுவதில் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களில் இவர் முதலில் இடம் பிடித்து கொண்டவர்.

**பேராசிரியர் கண்ணமுத்து சிதம்பரநாதன்**

செல்வநாயகம் முதல் அமிர்தலிங்கம் வரை, தமிழ் மக்களின் ‘ஆண்ட உரிமையை’ மீண்டும் பெறுவதில் அவர்கள் தவறிழைத்து விட்டார்கள் என்பதை சரிசெய்வதற்கு, துவக்குகளை தூக்கி வந்தவர்களில் டக்ளஸூம் ஒருவர் என்றாலும், ஆயுதங்களினால் உரிமையை பெறமுடியாது. மாறாக, தங்களுக்குள் சுட்டுக்கொண்டு, தமிழர்களையும் சுட்டு, உலக பயங்கரவாத இயக்கங்களில் ஒன்றாக பேரெடுக்க நேரிடும் என்பதனை தீர்க்கதரிசனத்துடன் புரிந்து கொண்டு, துப்பாக்கிகளை வீசிவிட்டு, பாராளுமன்ற ஜனநாயக முறைமையில், இணைப்பு அரசியல் செய்து மக்களுக்கு சேவையாற்ற வந்தவர் இவர். புலிகளின் காலத்திலும், அதற்கு பின்பும், தாயகம், தன்னாட்சி, சமஸ்டி, சுய நிர்ணய உரிமை என்று இன்று வரை தங்களையும் ஏமாற்றி, தமிழ் மக்களையும் ஏமாற்றி வருபவர்கள் மத்தியில், எவருக்கும் விட்டுக்கொடுக்காமல் தனக்கென்று ஒரு அரசியல் சித்தாந்தம் கொண்டவராக இருப்பது அவரின் வெற்றிகளுக்கு ஒரு காரணமாக உள்ளது.

வட மாகாணத்திற்கு அபிவிருத்திகள் என்ற பெயரில், சிங்களவர்களையும், பௌத்த மதத்தையும் சிங்கள அரசுகள் கொண்டுவருகின்றன. அதனால் வடக்கிற்கு அபிவிருத்தி வேண்டாம் என்று ஐந்து வருடத்தை வாய் கிழிய பேசி கோட்டை விட்ட, தலைமையின் ‘கையாலாகா’ போக்கின்போது மிகவும் வேதனைப்பட்டு கொண்டவர் டக்ளஸ். அந்த ஐந்து வருட சந்தர்ப்பம் அவருக்கு கிடைத்திருந்தால் அவரின் ஆளுமைக்கு கிடைத்த ஒரு ‘கொடை’யாகவும் வட மாகாண மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகவும் இருந்திருக்கும், வட மாகாண மக்கள் இப்போது அதனை உணருகின்றார்கள்.

2009 இல் யுத்தம் முடிந்த கையோடு, ராஜபக் ஷவின் இணைப்பில் கைகோர்த்து சின்னாபின்னமாக கிடந்த வட மாகாணத்திற்கான புகையிரத சேவையை துரிதமாக கொண்டுவந்தவர். அவர் கொண்டு வந்த புகையிரதங்களில் அன்று முதல் இன்று வரை புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் உட்பட யாழ்ப்பாண தமிழர்கள்தான் வருகின்றார்கள் போகிறார்கள், ஏமாற்று அரசியல் நடத்த முற்படும், தமிழ்த் தலைமைகள் கூறுவது போல சிங்களவர்களும் வரவில்லை, பௌத்தமும் வரவில்லை.

டக்ளஸூடனான சந்திப்பின் பின் நான் இந்தக் கட்டுரையை எழுதுவதற்கு முக்கிய

காரணம் இருக்கிறது. நான் இந்தியாவில் வாழ்கின்ற தமிழ் அகதிகளின் வாழ்வியலில் கரிசனை கொண்டவன். இந்தியாவில் வாழும் தமிழ் அகதிகள் பற்றிய ஆய்வை செய்திருந்தேன். ஆய்வு அறிக்கையின் பிரதிகளை பாராளுமன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும், வட மாகாண முதலமைச்சருக்கும் அப்போது அனுப்பியிருந்தேன். இவர்கள் எவரும் பாராளுமன்றத்திலோ அல்லது வெளியிலோ இது பற்றி பேசியதும் கிடையாது, இந்தியாவில் உள்ள அகதிகள் பற்றி அலட்டிக்கொள்ளவும் இல்லை. ஆனால் டக்ளஸ் பல முறை பாராளுமன்றத்தில் கேள்விகள் கேட்டுள்ளார், உரையாற்றியுள்ளார், மேலும் தமிழ் நாட்டுக்கு சென்ற போதும் இது பற்றி பேசியுள்ளார். கடந்த ஜூன் மாதம் பாராளுமன்றத்தில் அமைச்சர் சுவாமிநாதனிடம், பல்வேறு கேள்விகளை கேட்டு, தமிழ் அகதிகளை விரைவாக நாடு திரும்புவதற்கான நடவடிக்கைகள் பற்றியும் வினவியிருந்தார்.

இந்தியாவில் வாழும் தமிழ் அகதிகள் விவகாரத்தில் நான் ஏன் கரிசனையாக இருக்கின்றேன் என்பதை வெளிக்காட்டுவது மாத்திரமில்லை எனது முயற்சி, தமிழ் அகதிகள் தொடர்பான விவகாரங்களில் எனக்குள்ள ஈடுபாடுகள், அதுபற்றி மற்றவர்களுக்கு எடுத்துக்கூறி அரசியல் தலைமைகளுக்கும், கொள்கை வகுப்பவர்களுக்கும் அவர்களுக்கு அறிய கிடைக்காத விபரங்களை தெரியப்படுத்துவது எப்போதும் ஒரு பயனுள்ள விடயமாகும். அந்த வகையில் அகதிகள் விவகாரத்தில் எனது பயணத்தை சுருக்கமாக இங்கு கூறுவது பொருத்தமானதாக இருக்கும் என நம்புகிறேன்.

சர்வதேச சட்டத்துறையில் துறை சார் அறிவை பெற்றபோது, அகதி தஞ்சம் கோரி மேலைத்தேச நாடுகளில் வாழும் தமிழ் அகதிகள் மாத்திரமன்றி உலக அகதிகள் பற்றிய ஆய்வுகளை செய்து அவ்வப்போது அறிக்கைகளை வெளியிட்டு வந்துள்ளேன். நான் தஞ்சம் கோரி அகதியாக வாழ்ந்த ஐக்கிய இராச்சியத்தில் 1983 – முதல் 2003 ஆம் ஆண்டு வரை (இருபது வருடங்கள்) இலங்கையை சேர்ந்த அகதிகள் எண்ணிக்கை சுமார் 51 ஆயிரமாக இருந்தது.இவர்களில் சுமார் இரண்டாயிரம் பேருக்கு மாத்திரமே அகதி அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் 15 ஆயிரம் பேருக்கு மனிதாபிமான அடிப்படையில் இருப்பிட அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மிகுதியான 34 ஆயிரம் பேரின் விண்ணப்பங்களை நிராகரித்து தற்காலிக இருப்பிட அனுமதியுடன், இலங்கையில் யுத்தம் முடிவடைந்து சமாதானம் உருவாகும் போது, இவர்களை நாடு கடத்தும் நோக்கில் பிரித்தானிய அரசு எதிர்பார்த்திருந்தது. இவர்களில் சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேல் பிரித்தானியாவில் வாழ்ந்தவர்களும் அடங்குவர்.

இந்த காலப்பகுதியில் நான் பிரித்தானியா அகதிகள் பணியகத்தின் சர்வதேச சட்ட ஆலோசகராக கடமையாற்றிக் கொண்டிருந்தேன். தமிழ் அகதிகளின் உரிமை என்பது பற்றியும் சர்வதேச அகதிகள் சட்டத்தின் வரைமுறைகளை பின்பற்றி பிரித்தானிய அரசு நடந்து கொள்ளாமல் தமிழ் அகதிகளின் மனித உரிமைகளுக்கு பாதுகாப்பளிக்கத் தவறிவிட்டது என்ற அடிப்படையில் லண்டனில் உள்ள கிழக்கு லண்டன் பல்கலைக்கழகத்தின் நெறிப்படுத்துகையின் உதவியுடன் நான் கடமையாற்றிய பிரித்தானிய அகதிகள் பணியகத்தின் அனுசரணையுடன் ஆய்வொன்றை செய்து அறிக்கையை வெளியிட்டேன். தற்போது பிரித்தானியாவின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் ஜெரேமி கோபான் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். இலங்கை தமிழ் மக்கள் பிரச்சினையில் அதிக கரிசனை கொண்டவர். தமிழ் அகதிகளுக்கு பல்வேறு உதவிகளை செய்து வந்தவர். நான் செய்த ஆய்வு அறிக்கை பற்றி பாராளுமன்றத்தில் உரையாடினார். தமிழ் அகதிகளின் மனித உரிமைகள் மதிக்கப் படவேண்டுமென வாதிட்டார். அதை தொடர்ந்து அந்த அறிக்கை சர்வதேச ஆய்வு சஞ்சிகையில் வெளிவந்தபோது, பிரித்தானிய குடிவரவு பகுதியினருக்கும் நிராகரிக்கப்பட தமிழ் அகதிகளின் நிரந்தர இருப்பிட அனுமதியை வழக்குவதற்கான சூழலை உருவாக்க நேர்ந்தது.

நான் இந்த ஆய்வை செய்துகொண்டிருந்த வேளை, இந்தியாவில் வாழும் அகதிகள் பற்றிய தகவல்களை சேர்ப்பதற்காக தமிழ் நாடு சென்று அங்குள்ள சில முகாம்களில் இருக்கும் அகதிகளை சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. அங்கு வாழும் அகதிகளின் வாழ்வியல் மிக வேதனையை உண்டாக்கியது. மேலைத்தேச நாடுகளில் அகதி தஞ்சம் கோரியவர்களை விட உண்மையாகவே தங்களது உயிர்களுக்கு பாதுகாப்பில்லை என்று ஆபத்தான கடல் கடந்து அங்கு தஞ்சம் கோரியவர்களின் அவல வாழ்வியலை வெளிக்கொணர வேண்டும் என்று முற்பட்டேன். இலண்டனில் இருக்கும் சர்வதேச குடிவரவாளர்களுக்கான அமைப்பின் அனுசரணையுடன் தமிழ் நாடு திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் நெறிப்படுத்தல் உதவியுடன் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பரந்த அளவிலான ஆய்வு ஒன்றை செய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டேன். தமிழ் நாட்டில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் வாழும் முகாம்களுக்கு நேரடியாக சென்று தரவுகள் சேகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் முடிவுகளும் பரிந்துரைகளும் செய்யப்பட்டன.

கடந்த வருடம் அமைச்சராக இருந்த சுவாமிநாதனையும் அவரது உயர் அதிகாரிகளையும் சந்தித்து, நாடு திரும்ப விரும்பும் தமிழர்களுக்கான தேவைகளை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் பல யோசனைகள் பற்றி கலந்துரையாடி தொடர்ந்து செயற்பாடுகளை முன்னெடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது. அதன் பின்பு அரசியல் பிரச்சினைகளின் பின்பு டக்ளஸ் அமைச்சராக பதவியேற்ற போது, இந்த விடயம் தொடர்பாக மின்னஞ்சல் மூலமாக விபரங்களை தெரியப்படுத்தினேன். தமிழ் அகதிகள் பற்றிய பல கட்டுரைகளை நான் வீரகேசரியில் எழுதியுள்ளேன். டக்ளஸ் பாராளுமன்றத்தில் இந்த விவகாரம் தொடர்பாக பல தடவைகள் அமைச்சரிடம் கேள்விகள் கேட்டும் உள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு, முல்லைத்தீவு மகாவலி அபிவிருத்தித் திட்டம் பற்றி செய்திகள் வெளிவந்தன. இந்த திட்டத்தின் மூலம் சிங்கள மக்களை குடியேற்ற அரசு முனைகின்றது என்ற குற்றச்சாட்டை தமிழ் அரசியல்வாதிகள் முன்வைத்தனர். இதுபற்றி ஜனாதிபதியும் ஒரு சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார். இந்த தறுவாயில் இந்தியாவில் உள்ள அகதிகளில் சுமார் அறுபது வீதமானோர் தாங்களாகவே திரும்புவதற்கு விரும்புகிறார்கள், அது சுமார் ஒரு லட்சம் பேர் என்ற தகவலை தெரிவித்து, அவர்களை முல்லைத்தீவு மகாவலித் திட்டத்தின் கீழ் குடியமர்த்த அரசுடன் இணைந்து நடவடிக்கை எடுப்பது பற்றிய எனது யோசனையை கடிதம் மூலம் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும் வட மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கும் பதிவு தபால் மூலம் அனுப்பியிருந்தேன். நான் இவர்களுக்கு கடிதம் அனுப்பிய விடயம் தொடர்பாக வீரகேசரியில் செய்தியாகவும் வெளிவந்தது. ஆனால் இவர்களிடம் இருந்து எந்தவித தகவலும் வெளிவரவில்லை.

இது தொடர்பாக சிறிதும் அலட்டிக்

கொண்டதாகவும் தெரியவில்லை. இந்த இருவரும், தங்களுக்கு ஆலோசனை சொல்வதற்கு 'நான் யார்?' என்ற போக்கில் இருந்திருக்கலாம். அவர்களுக்கு ஆலோசனை சொல்வதற்கு அவர்களை போன்ற அரசியல்வாதிகளாக இருக்கவேண்டும் என எதிர்பார்க்கின்றார்களோ என்பதில் ஐயப்பாடு உண்டு. நான் ஒரு அரசியல்வாதி இல்லை. வரவிரும்புபவரும் இல்லை. நான் சாதாரண ஒரு குடிமகன். தமிழ் அகதிகளின் வாழ்வியலில் ஒரு கரிசனை உள்ளவன் அதை விட வேறு எதுவும் இல்லை. இவற்றை விட, புலம் பெயர்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கானவர்களில், தான் பிறந்த நாட்டுக்கு, எஞ்சிய மீதி காலத்திலாவது, அங்கு சென்று, வெளிநாடுகளில் நாம் கண்டது, படித்தது, அறிந்து கொண்டது போன்றவற்றின் அனுபவங்களில் இருந்து பொருத்தமானவற்றை எனக்கு சிறு வயதிலிருந்து இலவச கல்வியை தந்து ஆளாக்கிய எனது தாய் நாட்டுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைக்கும் பலரில் நானும் ஒருவன்.

அகதி தஞ்சம் கோரிய மேலைத்தேய நாடுகளில் தமிழ் அகதிகள் வசதியாக வாழ்கிறார்கள். தங்களது உறவுகளை இழந்து, உடமைகளை இழந்து வெறும் கைக–ளுடன் தமிழ்நாடு ராமேஸ்வர கடற்கரை யோரங்களில் இறங்கிய தமிழ் அகதிகள், அங்கு முகாம்களில் வாழும் நிலைமையை பார்க்கும்போது, அவர்கள் தொடர்ந்து இருக்க வேண்டிய தேவையில்லை. இந்திய அரசோ, 'இருக்கும் வரை இருங்கள், விரும்பினால் போங்கள்' என்ற நிலைப்பாட்டுடன் இருக்கிறது. முப்பது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்துவரும் அவர்களுக்கு, குடியுரிமை இல்லை, வாக்குரிமை இல்லை, அரச தொழில் வாய்ப்புக்கள் இல்லை, சொத்துக்கள் வாங்கும் உரிமை இல்லை. திறமை இருந்தும் தங்கள் குழந்தைகளை உயர் கல்வி வழங்க பண வசதி இல்லை. இவற்றுக்கும் மேலாக மண்டபம் போன்ற முகாம்களில் 'கியூ' பிரிவில் பாதுகாப்பு அதிகாரிகளின் கெடுபிடிகள். யுத்த காலத்தில் சென்றார்கள், இப்போது யுத்தம் முடிவடைந்து விட்டது. மற்றைய தேசங்களில் அகதிகள் என்ற பெயரில் குடியேறியவர்கள் அந்த நாடுகளில் குடியுரிமை பெற்றுக்கொண்டு இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் செய்கிறார்கள். இந்தியாவில் இருக்கும் இவர்களோ இன்னும் அவல வாழ்வு வாழ்கிறார்கள். இவர்களின் வாழ்வியலில், சுபீட்சமான எதிர்கால வாழ்வை தேடிக்கொடுப்பது தமிழ் தலைமைகளுக்கு உரிய பொறுப்பாகும். அவர்கள் கௌரவத்துடனும்



மரியாதையுடனும் நாடு திரும்பி தங்களது வாழ்வியலை மீள சீரமைத்து தங்களது தாயகத்தில் வாழ்விக்க வேண்டியது தமிழ் அரசியல் தலைமைகளின் கடமை மாத்திரமன்றி, ஒட்டு மொத்த இலங்கை அரசினதும் பொறுப்பாகும்.

டக்ளஸ் தேவானந்தாவுக்கு, நான் செய்த ஆய்வு அறிக்கை பற்றி தெரியப்படுத்தியவுடன் அவர் என்னை நேரில் சந்தித்து இது தொடர்பாக மேலும் தெரிந்து கொள்ள விரும்பியதே, தமிழ் அரசியல் தலைமைகள் என்று கூறிக்கொண்டு, பாராளுமன்ற கதிரைகளை குறிவைத்து அரசியல் நடத்தும். 'பேர்வழிகளை' விட டக்ளஸ் வித்தியாசமானவர் என்பதனை உணர்த்தியது. அவரை நேரில் சந்தித்து தமிழ் அகதிகள் பற்றி உரையாடிய பின்பு, அவர் தமிழ் அகதிகள் திரும்ப வேண்டும், அவர்களுக்கு நம்பிக்கையான எதிர்காலத்தை உறுதிப்படுத்த வேண்டுமென்பதில் மிகவும் கரிசனை உள்ளவராக இருப்பதை உணர முடிந்தது. தான் தொடர்ந்து அமைச்சராக இருக்க வாய்ப்பு கிடைத்திருந்தால் ராமேஸ்வரம் – மன்னார் கப்பல் சேவையை ஆரம்பித்து உடனடியாக வரவிரும்புபவர்களுக்கு அவர்களின் உடமைகளை கொண்டுவருவதற்குரிய வழி முறைகளை கண்டிருக்க முடியும் என தனது அங்கலாய்ப்பை வெளிப்படுத்தினர். தற்போதைய சூழ்நிலையில் முன்னர் சுவாமிநாதனுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்தி ஏதாவது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியுமா என தான் பொறுப்பு வகித்த அமைச்சின் தற்போதைய செயலாளர் சிவஞானசோதியை சந்திப்பதற்கு, உடன் அவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, முன்கூட்டிய நேரம் ஒன்றை எனக்கு ஒழுங்குபடுத்தி தந்தது மாத்திரமன்றி, அவருடைய சந்திப்பின் பெறுபேறுகள் பற்றி தொலைபேசியில் தன்னுடன் தெரிவிக்குமாறும் என்னை கேட்டுக்கொண்டது, டக்ளஸ் தமிழ் அகதிகளின் பிரச்சினையில் எவ்வளவு கரிசனை உள்ளவர் என்பதையும் மேலும் எடுத்து காட்டியது.

இப்போது பிரதமர் ரணில் இந்த அமைச்சை பொறுப்பெடுத்துள்ளார். சுவாமிநாதனிடம் இருந்து வந்த இந்த அமைச்சு பறிப்பதற்கு தமிழ் அரசியல்வாதிகள்தான் காரணம் என செய்திகள் அடிபட்டன. அடுத்த ஒரு வருட காலத்தில் அந்த அமைச்சு எதுவும் சாதித்து விடப் போவதில்லை. இப்போதுள்ள சூழ்நிலையில் மைத்திரியும் ராஜபக்ஷவும் சேரப் போகும் கூட்டில், எந்த தேர்தல் வந்தாலும் ரணிலுக்கு தமிழர்களின் வாக்குகள் அவசியம் தேவை. ரணிலுக்கு இருக்கக் கூடிய தெரிவு சம்பந்தன்–சுமந்திரன் கோஷ்டியை நம்பியாக வேண்டிய நிலைமை. சம்பந்தன் கோஷ்டி அடுத்து வரும் தேர்தல்களில் கோட்டை விடப்போகின்றது என்பதை ரணில் அறியாமல் இருப்பது வேடிக்கையானது. ரணில் தன் பகுதிக்கு போவதை விட அடுத்த காலங்களில் வடக்கிற்கு அடிக்கடி வருவார், அபிவிருத்தி பற்றி கதைப்பார், இந்த சந்தர்ப்பத்தை பாவித்து ரணிலுக்கு முண்டு கொடுக்கும் தமிழ்த் தரப்புகளுக்கு ஏதாவது செய்து கொள்ளவேண்டும் என்ற முயற்சிகளும் காணப்படும். தமிழர்கள் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் அபிவிருத்திகள் முன்னெடுக்க முடியாது என்ற பிடிவாதத்தில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வட மாகாண அமைச்சரும் யுத்தம் முடிவுற்று கடந்த பத்து வருட காலத்தில் இனப்பிரச்சினைக்கும் தீர்வை கண்டு கொள்ளவில்லை, அபிவிருத்தியையும் செய்யவில்லை. டக்ளஸ், இனப்பிரச்சினைக்கான தீர்வும் அபிவிருத்தியும் சமமாக கொண்டு செல்லப்படவேண்டுமென்பதே தனது நிலைப்பாடாக இருந்து வருகின்றார்.

தமிழர் இனப் பிரச்சினைக்கு தீர்வாக புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாக கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக ரணில் அரசுக்கு ஆதரவு கொடுத்து 'இரகசிய இணை' அரசியலை நடத்தி

வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ரணில் கைவிரித்து, அந்த விடயத்துக்கு முற்றுப் புள்ளியும் வைத்து விட்டார். அடுத்து இருக்க போகும் பாராளுமன்றக் காலத்தில் எந்த தலைப்பை வைத்து அரசியல் நடத்துவது என்ற பெரும் தவிப்பில் தமிழர் தரப்புகள் இருக்கின்றன.

வடக்கு அபிவிருத்தி அமைச்சு ரணிலிடம் இருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை சாதகமாக்கி கொண்டு கொழும்பில் இருந்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைகள் 'கனவான்' அரசியல் நடத்துவதை விட்டு, வட மாகாண, அதுவும் முக்கியமான, யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் வாழும் மக்கள் முகம் கொடுக்கும் அன்றாட வாழ்க்கை அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காணுவது, அடுத்த தேர்தல் மேடைகளில் கதைப்பதற்கோ அல்லது தேர்தல் அறிக்கைகள் தயாரிப்பதற்கோ உதவும்.

இன்று வட மாகாணத்தில் என்றுமில்லாதவாறு, சமூக சீர்கேடுகள் உருவாக்கியுள்ளதை பலரும் பேசுகின்றார்கள். ஆனால் அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது அல்லது இல்லாமல் ஒழிப்பது தொடர்பாக முக்கிய அரசியல்வாதிகளுக்கும், மக்களின் பிரதிநிதிகளுக்கும் எந்த வழிகளும் தெரியவில்லை. யாழ்ப்பாண நகரத்தில், சில தனியார் வர்த்தக நிலையங்கள், ஹோட்டல்களை தவிர புதிய கட்டுமான அபிவிருத்திகள் கடந்த பத்து வருடங்களாக இடம் பெறவில்லை. நகர பாதை நிர்மாணம், வாகன போக்குவரத்து கட்டுப்பாடுகள், சாலையோர நடைபாதைகள், பஸ் தரிப்பு நிலையம் பொது சந்தை கொட்டில்கள் என்பன அப்படியே இருக்கின்றன. ஒரு நகரம் புதிய ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் மாற்றி அமைக்கப்படும் போதும், அல்லது நிர்மாணிக்கப்படும்போதும், அந்த நகரத்தில் வாழ்கின்றவர்கள் அல்லது அந்த நகரத்தை நாளாந்தம் பயன்பாட்டுக்கு பாவிப்பவர்களான, வாகன சாரதிகள், மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்கள், நடைபாதை மக்கள் எல்லோருமே அந்த நகர ஒழுங்கு விதிகளின் அமைவாக கட்டுப்பாட்டுடன் நடக்கவேண்டியது அவசியம். இதனை அங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகள் அல்லது அதற்காக பொருத்தப்பட்டுள்ள தானியங்கி கருவிகள் உறுதிப்படுத்தும். ஆனால் யாழ்ப்பாண நகரத்தில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக எதுவும் நடக்காத படியினால், எவருக்கும் எந்த பொறுப்பும் இல்லை. தன்னிச்சையாக வேண்டியபடி நடக்கின்றார்கள். வாகனங்களின் கட்டுக்கு அடங்கா வேகத்தில் குடியிருப்பு பகுதிகளில் ஓடுவதும், பாதையோரங்களில் நடைபாதைகளில் செல்பவர்கள் உயிரை கையில் பிடித்துக்கொண்டு செல்வதும் அங்கு நாம் பார்க்க கூடிய நாளாந்த காட்சிகளாகும்.

புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கக் கூடிய அபிவிருத்தித் திட்டங்களோ அல்லது முன்பிருந்த பாரிய வேலைவாய்ப்புகளை வழங்கிய காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை போன்ற தொழில் பேட்டைகள் இப்போது இல்லாத படியினால் வேலைவாய்ப்பற்று இருப்பவர்கள் சமூக விரோத செயல்களில் ஈடுபட வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. அபிவிருத்தியை பற்றியே பேச விரும்பாத அரசியல்வாதிகள் இந்த சமூக சீர்கேடுகள் இடம் பெறுவதற்கு ஒரு வகையில் காரணமாக இருக்கின்றார்கள். டக்ளஸ் காரியாலயத்தில் கியூவில் நின்றவர்கள் அதிகமானோர், தொழில்வாய்ப்புக்காக உதவி தேடி வந்தவர்கள் என்பதையும் கவனிக்க கூடியதாக இருந்தது. போதைப்பொருள் பாவனை, கொள்ளைகள், கொலைகள், பாலியல் துன்புறுத்தல்கள் போன்ற சமூக விரோத செயல்களை பொலிஸாராலோ அல்லது இராணுவத்தினாலோ மாற்றி விட முடியாது. காரணம் அவர்களும் அதில் பங்காளிகள் என்று பரவலாக யாழ்ப்பாணத்தில் பேசப்படுகின்றது. இந்த சந்தர்ப்பதில் டக்ளஸ் பாராளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றும் போது 'பேசுவது தேசியம் செய்வது கஞ்சா வியாபாரம்' என சுட்டிக்காட்டி பேசியது பாராளுமன்ற பிரதிநிதிகளின் பங்குகளும் உண்டு என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

யாழ்ப்பாண நகரம் மாறவேண்டும், மாற்ற முனையும் ஆளுமை உள்ளவர்களுக்கு மக்கள் ஆதரவு வழங்க மக்களும் மாறவேண்டும், கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்கள், தங்களுக்கு தேவை வரும்போது, டக்ளஸ் அலுவலகத்தில் கியூவில் இருப்பது, 'பிழையானவர்களுக்கு வாக்குகளை அளித்து விட்டு சரியானவரிடம் உதவிக்கு நிற்பதாகும்' இச் சந்தர்ப்பதில் வட மாகாண ஆளுநர் அண்மையில் தெரிவித்த கருத்தையும் இங்கு பதிவு செய்வது பொருத்தமாகும். வட மாகாண அரசியல் வாதிகள் மக்கள் சார்ந்த நலன்கள் தொடர்பான பிரச்சினைகளோ அல்லது உதவிகளையோ தன்னிடம் கேட்பதில்லை என்றும், தங்களின் சுயநல தேவைகளை பற்றியே பேசுகிறார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார். சிலவேளை தங்களுக்கு வாக்களித்த எவரும் அவர்களிடம் உதவி கேட்டு செல்வதில்லையோ தெரியாது. அதனால்தான், அவர்களிடம் 'கியூ' வில் நிற்காமல் டக்ளஸ் காரியாலயத்தில் நிற்கிறார்கள். இனிவரும் தேர்தல்களில் வட மாகாண வாக்காள மக்கள் சரியானவர்களுக்கு வாக்களித்து சரியானவர்களிடமே உதவிகளையும் நாடி 'கியூ' வில் நிற்பது வரவேற்கத்தக்கதாகும்.

(மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளை எனும் கிராமத்தில் பிறந்த பேராசிரியர் கலாநிதி கண்ணமுத்து சிதம்பரநாதன் தற்போது இலண்டனில் வசித்து வருகின்றார். இக்கட்டுரை கடந்த நவம்பர் 16ந் திகதி நிகழ்ந்த அரசு மாற்றத்தின் முன்னர் எழுதப்பட்டது)

**நன்றி: வீரகேசரி, 2019.02.24**

## ஊடகச் சுதந்திரத்திற்கு ஊறுவிளைவிக்க மாட்டேன்

இந்நாட்டின் ஊடகச் சுதந்திரத்துக்கு, தனது ஆட்சிக் காலத்தின் போது, எவ்வித இடையூறும் ஏற்படுத்தப்போவதில்லை என்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

எந்தவொரு நியாயமான விமர்சனத்துக்கும் தான் வாய்ப்பு அளிப்பதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, நாட்டுக்கும் நாட்டின் நற்பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்தாது, நாட்டுக்கான பொறுப்பை, ஊடகங்கள் சரிவரச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பொன்று, 12.12.2019 இல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலுமுரைத்துள்ள அவர், அரசியல்வாதிகளினதும் அரச அதிகாரிகளினதும் செயற்றிறனை மேம்படுத்துதல், ஊழல் மோசடிகளைத் துடைத்தெறிதல், பொருளாதார அபிவிருத்தி உள்ளிட்ட பல எதிர்பார்ப்புகளுடனேயே, இந்நாட்டு மக்கள் தன்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளனர் என்றார்.

முதலீடுகள் மற்றும் பொருளாதாரத் தொடர்புகளைச் சர்வதேச ரீதியில் மேற்கொள்வதற்கு, நாட்டின் பிரதிவிம்பம் மிகவும் முக்கியமானது என்றும் இந்தப் பிரதிவிம்பத்தைக் கட்டியெழுப்பும் பாரிய பொறுப்பு, இந்நாட்டு ஊடகங்களுக்கே உண்டென்றும், ஜனாதிபதி தெரிவித்தார். சுவிட்ஸர்லாந்துத் தூதரக அதிகாரி விடயத்தில், சர்வதேச ஊடகங்கள் செயற்பட்ட விதம் குறித்துத் தான் கவலையடைவதாகவும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான திறன், இந்நாட்டு ஊடகங்களுக்கே உண்டென்றும் கூறினார்.

# இனப் பிரச்சினைக்கு கோத்தபாயவின் தீர்வு என்ன?

இலங்கையின் புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக அண்டை நாடான இந்தியாவுக்கு சென்று திரும்பியுள்ளார். அவர் ஜனாதிபதியாகத் தெரிவானதும் முதல் ஆளாக இலங்கைக்கு பறந்து வந்தவர் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களே. அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சார்பாக விடுத்த அழைப்பை ஏற்றே கோத்த அங்கு சென்று வந்துள்ளார்.

அதுவுமல்லாமல் இந்தியா இலங்கைக்கு மிக அருகில் உள்ள ஒரு நாடு. (ஒரு சிகரட் பற்றி முடிப்பதற்கிடையில் இந்திய விமானங்கள் இலங்கைக்குள் வந்துவிட முடியும் என காலஞ்சென்ற அனுரா பண்டாரநாயக்க ஒருமுறை நாடாளுமன்றத்தில் கூறியதை இங்கு நினைவு கூரலாம்)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு காலத்தில் நிலத்தொடர்பு இருந்திருக்கலாம் என இப்பொழுது ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அதன் காரணமாக இந்தியாவிலிருந்து சிங்களவர்களும், தமிழர்களும், இஸ்லாமியர்களும் இலங்கையில் வந்து குடியேறினார்கள் என்பதும் உறுதியான கருத்தாக நிலைநாட்டப்பட்டுள்ளது.

எனவே இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே சுமார் மூவாயிரம் வருடங்கள் பழமையான கலாச்சார, பண்பாட்டு, மத உறவுகள் இருந்து வருகின்றன.

இவற்றைவிட, இலங்கையில் வாழும் சிறுபான்மை தேசிய இனமான தமிழர்களின் இரத்த உறவுகள் என வர்ணிக்கப்படும் சுமார் 8 கோடி தமிழர்கள் இலங்கையின் வட பகுதிக்கு மிக அண்மையில் தென்னிந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர். இதன் காரணமாக பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தென்னிந்திய மன்னர்கள் இலங்கை மீது படையெடுத்து இலங்கையின் சில பகுதிகளை ஆட்சி செய்த வரலாறுகளும் உள்ளன.

இந்த வரலாற்று நிகழ்வுகள் இலங்கையின் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களிடையே ஒரு அச்சமாக காலாதிகாலமாக இருந்து வருகின்றது. இலங்கைத் தமிழர்கள் தாங்கள் இலங்கையில் சிறுபான்மை இனமாக இருப்பதால் பெரும்பான்மை சிங்கள இனத்தால் புறக்கணிக்கப்பட்டு



ஒடுக்கப்படுகிறோம் எனக் கருதுகையில், சிங்கள இனமோ தாம் உலகில் தமிழர்களுடன் ஒப்பிடுகையில் மிகச் சிறுபான்மையினர் என்ற அச்சத்தில் இருக்கின்றனர்.

இந்த வரலாற்றுப் பின்புலத்தில்தான், இலங்கைத் தமிழர்களின் தலைமை இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழர்களுக்கென்று தனிநாடு ஒன்று அமைப்பது என்ற தவறான புத்திசாதுரியமற்ற தீர்மானம் ஒன்றை 1976இல் எடுத்தது. அன்று இருந்த அந்த தலைமை தேர்தலில் வெற்றி பெறுவதற்கான ஒரு தந்திரோபாயமாக அந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தாலும், அந்தத் தீர்மானத்தால் உந்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் அமைப்புகளை உருவாக்கி அந்த இலக்கை அடைவதற்காக ஆயுதப் போராட்டத்தில் குதித்தனர்.

**பரிபூரணன்**

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் சிங்கள மக்களின் இன்றைய தலைமுறைக்கு இந்தியா மீது மீண்டும் சந்தேகம் ஏற்பட வழிபிறந்தது. அதாவது, ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் இயக்கங்களுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே பொறுப்பு வாய்ந்த ஒரு மத்தியஸ்தராகச் செயல்படுவதற்குப் பதிலாக இந்திராகாந்தி தலைமையில் இருந்த அன்றைய இந்திய அரசு, தமிழ் இயக்கங்களுக்கு ஆயுதமும், பயிற்சியும், பின்தளமும் வழங்கி இலங்கையின் இறையாண்மையை கேள்விக்கு உள்படுத்தியது.

இந்தியாவின் இந்தச் செயல்பாடு இன்றுவரை இலங்கையின் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களின் மனதில் மாறாத வடுவாக இருக்கின்றது. அவர்களது கேள்வி இதுதான்.

அதாவது, இலங்கையில் 1971இல் ஆட்சியில் இருந்த சிறீமாவோ பண்டாரநாயக்கவின் அரசை ஜே.வி.பி. இயக்கம் ஆயுதக் கிளர்ச்சியின் மூலம் தூக்கியெறிய முயன்ற பொழுது அதை முறியடிக்க ஓடோடி வந்த இந்திராகாந்தியின் இதே இந்திய அரசு, தமிழ் இயக்கங்கள் இலங்கையை இரண்டாகப் பிரிப்பதற்கு ஆயுதம் ஏந்திய பொழுது அதை முறியடிக்க ஏன் ஓடி வரவில்லை என்பதாகும். எனவே, இந்தியா இன அடிப்படையில் – அதாவது தமிழர்களுக்கு ஆதரவாக – செயல்படுகிறது என்ற வலுவான சந்தேகம் சிங்கள மக்கள் மத்தியில் நீறுபூத்த நெருப்பாக இருக்கின்றது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான், 1987இல் செய்யப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தம் இலங்கை மீது வலிந்து திணிக்கப்பட்ட ஒரு ஒப்பந்தம் என்ற கருத்து சிங்கள அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றது. இதை அந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

1987இல் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட பொழுது அன்றைய பிரதான எதிர்க்கட்சியான சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி அதை எதிர்த்தது. அதேபோல ஜே.வி.பியும் அதை எதிர்த்ததுடன், அதை மையமாக வைத்துத்தான் தனது இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியையும் ஆரம்பித்தது. இவை எல்லாவற்றையும் விட அந்த ஒப்பந்தத்தில் இலங்கை சார்பாக கையெழுத்திட்ட ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசின் பிரதம மந்திரி ஆர்.பிரேமதாசவும் வேறு சில அமைச்சர்களும் அதை எதிர்ப்பதற்காக ஒப்பந்த நிகழ்வில் பங்குபற்றாமல் அதைப் புறக்கணித்தனர். ஒப்பந்தத்தில் கையெழுத்திட வந்த அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி (இந்திராகாந்தியின் மகன்) மீது அணிவகுப்பு மரியாதை செலுத்த வந்த ஒரு இலங்கைக் கடற்படை வீரனால் தாக்குதல் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

இதிலிருந்து தெரிவது என்னவெனில், இலங்கையின் பிரதான கட்சிகள் மூன்றும் இந்த ஒப்பந்தத்தை ஏற்கவில்லை என்பதையே. 1957இல்

வெளித்தலைபீடு எதுவுமின்றியே அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க இலங்கை தமிழரசுக் கட்சி தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் செய்த இனப்பிரச்சினை சம்பந்தமான ஒப்பந்தத்தை (பண்டா – செல்லா ஒப்பந்தம்) ஏற்காதவர்கள், இந்தியா என்ற சிங்கள மக்களை வரலாற்று ரீதியாக பயமுறுத்தி வைத்திருக்கும் ஒரு நாட்டால் 'திணிக்கப்பட்ட' ஒரு ஒப்பந்தத்தை ஏற்பார்கள் என நினைப்பது தவறாகும்.

அதனால்தான் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஜே.ஆர.ஜெயவர்த்தனவினாலேயே ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்த முடியவில்லை. அவருக்குப் பின்னர் ஜனாதிபதியாக வந்த ஆர்.பிரேமதாச ஒப்பந்தத்தத்தை தூக்கி வீசியதுடன், இந்த ஒப்பந்தத்தால் தமிழர்களுக்கென உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபையையும் கலைத்துவிட்டார். பின்னர் ஜனாதிபதிகளாக வந்த சந்திரிக குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச ஆகியோரும் ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றத் துணியவில்லை.

இந்தியாவால் 'திணிக்கப்பட்ட' ஒப்பந்தம் என சிங்கள மக்களால் கருதப்பட்ட ஒன்றை நடைமுறைப்படுத்துவதை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று கருதியதினாலோ என்னவோ, சந்திரிக தான் ஜனாதிபதியாக இருந்தபொழுது 2000 ஆண்டில் புதிய, பிராந்திரயங்களுக்கு அதிகாரங்கள் வழங்கும் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்தார். ஆனால் வழமைபோல ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ் பிற்போக்குத் தலைமையும் சேர்ந்து அதை நிறைவேற்றவிடாமல் தடுத்துவிட்டார்கள்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்ற கடந்தகால அரசாங்கங்கள் தயங்கியதற்குக் காரணம், மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதற்கு விரும்பாமையே. அவற்றை வழங்கினால் தமிழ் பிரதேச மாகாண சபைகள் பிரிவினைப்பாதையில் செல்ல ஆரம்பித்துவிடும் என்ற அச்சமே அவர்கள் அதற்குக் கூறும் காரணம். ஆனால் அவர்கள் அதை வெளிப்படையாகவும், தெளிவாகவும் கூறுவதில்லை.

ஆனால் அண்மையில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச அதை தெளிவாகவும், வெளிப்படையாகவும் கூறிவிட்டார். இந்திய ஊடகங்கள் சிலவற்றுக்கு அவர் பேட்டியளித்த போது, 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கும் சில ஏற்க முடியாத விடயங்கள் இருக்கின்றன என்றும், சிங்கள மக்களுக்கு சந்தேகம் வரக்கூடிய நடவடிக்கை எதனையும் செய்ய முடியாது என்றும் கூறிவிட்டார். அவர் இதை வெளிப்படையாகக் கூறியது நல்ல விடயமே. சரி, அப்படியானால் இலங்கையில் நிலவும் தேசிய இனப்பிரச்சினைக்கு அவர் முன்வைக்கப்போகும் தீர்வு என்ன?

வழமைபோல தீவிர சிங்கள இனவாத சக்திகள் சொல்லும் "இலங்கையில் இனப்பிரச்சினை என்று எதுவும் இல்லை" என்று சொல்லப் போகிறாரா? அல்லது அவரது சகோதரர் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபொழுது 'வடக்கு கிழக்கை பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்தால் இனப்பிரச்சினை தானாகத் தீர்ந்துவிடும்' எனக் கருதிச் செயல்படப் போகிறாரா? அல்லது ரணில் விக்கிரமசிங்க செய்தது போல "செய்கிறோம், செய்கிறோம்" என்று சொல்லிக் காலத்தைக் கடத்தி ஏமாற்றப் போகிறாரா? அல்லது சந்திரிக செய்தது போல புதிய அரசியல் அமைப்பு ஒன்றை வரைவதன் மூலம் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நமது நாட்டின் சொந்த முறையில் தீர்வுகாணப் போகின்றாரா?

தவிர்க்க முடியாத இந்தப் பிரச்சினைக்கு இவற்றில் ஏதாவது ஒன்றை அவர் செய்தே ஆக வேண்டும். சரியானதைச் செய்வாரா அல்லது 'எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில் சக்கடத்தாரும் ஏறி விழுந்தார்' என்ற கதை போல ஆகுமா என்பதற்கு அவரது நடவடிக்கைகள்தான் பதில் சொல்ல வேண்டும்.

**நன்றி இணையத்தளம்: chakkaram.com**

# பெண்களின் சமூகநிலை: இந்தியா 112-ஆவது இடம்

**ஆ**ண்களுக்கு இணையான பெண்களின் சமூக வளர்ச்சி நிலை ஒப்பீட்டில், உலகளவில் இந்தியா 112-ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.2018-ஆம் ஆண்டில், 108 ஆவது இடத்தில் இந்தியா இருந்தது. தற்போது அதைக்காட்டிலும் 4 இடங்கள் பின்தங்கியுள்ளது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையே இருக்கும் சுகாதாரம், கல்வி, பொருளாதாரம், மற்றும் அரசியல் அதிகாரம் ஆகியவற்றின் அடிப்படையிலான ஒப்பீட்டு இடைவெளி, 'பாலின இடைவெளி' (Gender Gap) என்று அழைக்கப்படுகிறது. அந்த வகையில், பாலின இடைவெளி குறித்த ஆய்வுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் சமீபத்திய அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, உலக பொருளாதார மன்றம் (World Economic Forum - WEF), உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கையை (Global Gender Gap Report 2020) வெளியிட்டுள்ளது.

அதில், ஐஸ்லாந்து, நோர்வே மற்றும் பின்லாந்து நாடுகள் முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளன. ஆனால், 153 நாடுகள் கொண்ட பட்டியலில் இந்தியா படுமோசமாக 112-ஆவது இடத்திலேயே வந்துள்ளது. இந்தப் பட்டியலில், ஆசிய நாடுகளான சீனா 106 ஆவது இடத்தையும், இலங்கை 102-ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. பாகிஸ்தான் மிகமோசமாக 151-ஆவது இடத்தையே பிடிக்க முடிந்துள்ளது.

ஆண் - பெண் வளர்ச்சி நிலைகளிலுள்ள வேறுபாடுகளைக் குறைப்பதற்கு உலகளவில் இன்னும் 108 ஆண்டுகள் வரை ஆகும் என்று 2018-ஆம் ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. ஆனால், இந்த காலவரையறை 2019-இல் 99.5 ஆண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளது. அரசியல் அதிகாரம் அளிப்பதில்தான் மிகப்பெரிய இடைவெளிநிலவுவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. உலகெங்கிலும் உள்ள நாடாளுமன்றங்களில் 35 ஆயிரத்து 127 இடங்கள் உள்ளன. இதில், 25 சதவிகித இடங்களில் மட்டுமே பெண்கள் இடம்பெற்றுள்ளனர். 3 ஆயிரத்து 343 அமைச்சர்களிலும், பெண்கள் 21 சதவிகிதம் பேர் மட்டுமே உள்ளனர்.

# பிரித்தானியாத் தேர்தலில் கொன்சவேட்டிவ் கட்சியின் பாரிய வெற்றியின் பின்னணி என்ன?



பிரித்தானியாவில் பலரும் எதிர்பார்த்தபடி கொன்சர்வேட்டிவ் (பழமைவாத) கட்சியின் தலைவர் போரிஸ் ஜோன்சன் நேற்று நடந்த தேர்தலில் அமோக வெற்றி பெற்றிருக்கிறார். தேர்தல் ஆய்வுகளும் பத்திரிகைகளும் சொல்லிக்கொண்டு வந்த தொகுதிகளைவிடக் கூடத்தொகுதிகளை வென்றிருக்கிறார். பிரபுக்கள், முதலாளிகள், நில உடமையாளர்களின் கட்சி எனச் சொல்லப்படும் கொன்சர்வேட்டிவ் கட்சி பிரித்தானிய சரித்திரத்தில் முதற்தடவையாகத் தொழிற்கட்சியின் கோட்டை என்று சொல்லப் பட்ட, இங்கிலாந்தின் வடகிழக்கின் பல தொகுதிகளையும் வென்றெடுத்து வெற்றிவாகை கொண்டாடுகிறது.

கொன்சர்வேட்டிவ் கட்சி 45 விகித வாக்குகளையும், தொழிற்கட்சி 33 விகித வாக்குகளையும் பெற்றிருக்கிறது. பிரித்தானியாவின் 650 தொகுதிகளில் கொனசர்வேட்டிவ் கட்சி 364 இடங்களையும், தொழிற்கட்சி 203 இடங்களையும், மிகுதிகளை மற்றக் கட்சிகளும் பெற்றிருக்கின்றன. தேர்தல் பிரசாரத்தில் போரிஸ் ஜோன்சன் 68 இடங்களை மேலதிகமாக வென்று அரசு அமைப்பேன் என்றர். ஆனால் 78 தொகுதிகளை மேலதிகமாக வென்று அமோக வெற்றி பெற்றிருக்கிறார். ரோனி பிளேயார் 1997ல் 20.000 மேலதிக வாக்குகளால் வென்றெடுத்த செட்ஜ்பீல்ட் என்ற தொகுதியும் பறிபோனது தொழிற்கட்சியினரான எங்களைத் துன்பப்படுத்தியது. கொன்சர்வேட்டிவ் கட்சியின் மகத்தான வெற்றி. தொழிற்கட்சி 59 தொகுதிகளைக் கொன்சர்வேட்டிவ் கட்சியிடம் பறிகொடுத்த படுதோல்வி இந்தத் தேர்தலில் வெளிப்படுகிறது.

இதற்கெல்லாம் தலையாய காரணம் ஐரோப்பிய நாடுகளிலிருந்து பிரித்தானியா விலகவேண்டும் என்று பிரித்தானியாவின் பெரும்பான்மையான ஆங்கிலேயர்கள் விரும்புவதாகும். அந்த விருப்பத்தைத் தொழிற்கட்சி பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை என்பது பொது மக்களின் ஆத்திரமுமாகும். ஏகாதிபத்திய ஆளுமையாக இருந்த பிரித்தானியாவில், ஐரோப்பிய ஒன்றியம் என்ற பெயரில், பொருளாதார வசதியற்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கானவர்கள் இலண்டன் நகரிற் குவிந்தது அவர்களால் சகிக்க முடியாமலிருந்தது.

வெளிநாட்டாரின் வருகையால் ஆங்கிலேய இளம் தலைமுறையினர் தங்களுக்கு ஒரு வீடு வாங்கமுடியாத அளவுக்கு வீடுகளின் விலைகள் ஆகாயத்தைத் தொட்டன. அத்துடன் ஆங்கிலேயர் கேட்கும் சம்பளத்தை விட மிகக் குறைந்த சம்பளத்தில் வேலை செய்யப் பல்லாயிரம் ஐரோப்பிய இளைஞர்கள் லண்டனை நிறைத்தார்கள். பணக்கார நாடான இங்கிலாந்துக்கு வந்து களவு செய்யவும், பாலியல் தொழிலுக்காகவும் ஏழைப் பெண்களைக் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து கொண்டு வரவும் நூற்றுக்கணக்கான கிரிமினற் குழுக்கள் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து லண்டனுக்குள் மிகவும் இலகுவாக நுழைந்தன. இதனூடாக பிரித்தானியாவின் பெயருக்கும், சாதாரண மக்களின் பாதுகாப்புக்கும் தலையிடியைக் கொடுத்தார்கள்.

2004ம் ஆண்டு, ரோனி பிளேயர், ஐரோப்பிய ஒன்றிணையத்தின் மக்கள் அத்தனைபேரினதும் சுதந்திர நடமாட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார். அதைத் தொடர்ந்து, தங்களின பிரித்தானியத் தனித்துவக் கலாச்சாரம், ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்தவராக இருப்பதால் அழிந்து தொலைவதாகப் பிரித்தானியர் பலர் குமுறினர். 44 வருடங்களாக ஐரோப்பிய ஒன்றியத்துடனிருந்த தொடர்பைத் துண்டிக்க முடிவெடுத்தார்கள். ஐரோப்பாவிலிருந்து வெளியேற 2016ம் ஆண்டு வாக்களித்தார்கள். தொழிற்கட்சி, லிபரல் டெமோக்கிரசிக் கட்சி, ஸ்கொட்டிஷ் தேசியக் கட்சிகளின் இழுபறியால் இங்கிலாந்து ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவது பற்றிய விவாதம் நேற்றுவரை தொடர்ந்தது.

அவற்றிற்கு ஒட்டு மொத்த முற்றுப் புள்ளியும் வைக்கப் பிரித்தானிய மக்கள் வர்க்க சார்பிலிருந்து வெளிவந்து 'பிரக்ஷிட் போரிஸைத்' தெரிவு செய்திருக்கிறார்கள்.
பணத்தின் ஆளுமையில் அமைந்த கொன்சர்வேட்டிவ் கட்சி, தொழிலாளர்களுக்குப் பெரிய நன்மை செய்யாத கட்சி. முதலாளிகளின் நன்மையை முன்னெடுப்பது. ஆனாலும், தொழிற்கட்சி சார்ந்த பெரும்பாலான மக்கள் 'பிரக்ஷிட்' காரணமாகக் கொன்சர்வேட்டிவ் கட்சிக்கு வாக்களித்திருக்கிறார்கள். மார்க்கரட் தச்சரை விட கூடிய அளவில் போரிஸ் ஜோன்சன் பிரித்தானிய மக்களின் வாக்குகளைப் பெற்றிருக்கிறார்.

தொழிற்கட்சியின் தலைவர் ஜெரமி கோர்பினின் தலைமையிலுள்ள தொழிற்கட்சி இரண்டாம் தடவையும் 'பிரக்ஷிட்' சார்ந்த கொள்கைகளைச் சரியாக முன்னெடுக்காமல் தேர்தலில்

தோல்வியைத் தழுவியிருக்கிறது.

பிரித்தானியா, முதலாளித்துவத்தின் பிறப்பிடம். 53 நாடுகளைக் காலனித்துவம் என்ற பெயரில் கொள்ளையடித்து மாடமாளிகைகள் கட்டிக் கொண்டவர்கள். இன்னும் அரசகுடும்பத்தைப் போற்றும் பழமைவாதம் கொண்ட கலாச்சாரத்தைக் கொண்டவர்கள். உலகத்திலுள்ள பணக்காரர்கள் பிரித்தானியாவில் குடியேறுவதற்கு முதலிடச் சுதந்திரம் கொடுப்பவர்கள்.

ஆனாலும், பிரித்தானிய மக்களிற் பெரும்பான்மையினர் சமத்துவத்தை விரும்புவர்கள். காலனித்துவத்திற்கு எதிராகப் போராடியவர்கள். அதிலும் பிரித்தானிய தொழிற் கட்சி 'மனித நேயத்தைப்' போற்றும் தத்துவத்தைக் கொண்ட கட்சி. இந்தியா மட்டு மல்லாது, ஒட்டு மொத்த காலனித்துவ நாடுகளுக்கும் சுதந்திரம் கொடுத்த கட்சி. பெண்களுக்குச் சமத்துவம் என்று வாய்ப்பேச்சில் சவடாலடித்துக் கொண்டிருக்காமல் 25 விகிதமாவது பெண்களின் பிரதிநதித்துவத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தவர்கள். உலகமே வியக்கும் சுகாதார சேவை இலவசமாக வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தவர்கள்.

தொழிலாளர்களின் நலன்களுக்காகப் பல அரும்பெரும் திட்டங்களைக் கொண்டு வந்தவர்கள். ஆனாலும், மிகவும் இடதுசாரியான ஜெரமி கோர்பின், பணக்காரர்களுக்கு எதிராகக் கொண்டு வந்த சில தேர்தல் விஞ்ஞாபனங்கள் பலரை முகம் சுழிக்க வைத்தது. 'பிரக்ஷிட்' விடயத்தில் ஜெரமியின் தெளிவற்ற நிலைப்பாடு, அவருக்குக் கிடைத்த தோல்விக்குத் துணையாக இருந்தது. தொழிலாளர் வர்க்கத்தின் கணிசமானவர்களை அவரிடமிருந்து விலக்கியது. அந்த இடங்களைக் கொனசர்வேட்டிவ் கட்சி வெற்றி கொண்டிருக்கிறது. ஜெரமியின் தோல்விக்கான பல காரணங்களில், பிரித்தானிய ஊடகங்கள் அவரின் இடதுசாரிக் கொள்கைகளை வெறுத்தது மிகவும் முக்கிய காரணமாகும். இடைவிடாமல் பெரும்பாலான- பிரித்தானிய ஊடகங்கள் ஜெரமிக்கு எதிராகச் செயற்பட்டன.

ஜெரமியின் தொழிற்கட்சி மட்டுமின்றி, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகமாட்டோம் என்று அடம்பிடித்த லிபரல் டெமோக்கிரசிக் கட்சியும் பெரிதாக முன்னேறவில்லை. அந்தக் கட்சியின் தலைவி ஜோ வின்ஸன் படுதோல்வியடைந்திருக்கிறார்.

**இனி என்ன நடக்கும்?**

போரிஸ் ஜோன்ஸன் தனது தேர்தல் பிரசாரத்தில் கொடுத்த வாக்குறுதியின்படி, ஜனவரி 31ம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற வேண்டும். அதற்கு முதல், ஐரோப்பிய ஒன்றியத்துடனான பன்முகத் தொடர்புகளை எப்படி அறுத்துக் கொள்வது, அல்லது ஏதோ ஒரு விதத்தில் தொடர்வது என்ற கேள்விகளுக்கு இருபகுதியினரும் வழிகள் தேடவேண்டும்.

நேட்டோ ஒப்பந்தம் சார்ந்த விடயங்கள் ஒட்டுமொத்த ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்புக்குப்புக்கும் பொதுவானவை. அந்த அமைப்பின் ஆரம்ப அமைப்பாளர்களில் பிரித்தானியா முன்னிலை வகிக்கிறது. அந்த அமைப்பில் பிரித்தானியாவின் இடம் தெளிவுபடுத்தப்பட வேண்டும்

விஞ்ஞான, விண்ணுலக ஆய்வுகள் சம்பந்தமான ஐரோப்பா ஒருமித்த திட்டங்களின் எதிர்காலமென்ன?

கிழக்கு ஐரோப்பிய அடிமட்டத் தொழிலாளர்களின் வரவு தடைப்பட்டால் அவர்களை நம்பியிருக்கும் பிரித்தானிய விவசாயத்தின் நிலைஎன்ன?

டொனால்ட் ட்ரம்பின் அன்புக்கும் ஆதரவுக்கும் தன்னை இணைத்துக் கொண்ட 'பிரித்தானிய ட்ரம்ப் போரிஸ் ஜோன்ஸன்' அமெரிக்காவின் வாலாக இயங்குவாரா என்கின்ற கேள்விகள் பலருக்குண்டு.

ஆனால் பொய்களைத் தாராளமாக வாரியிறைப்பவர் என்ற பெயரையும் கொண்டவர் அவர். 'பிரக்ஷிட்' விடயத்தில் எதிர்வரும் பேச்சுவார்த்தைகளில் என்னமாதிரி நடந்து கொள்வார், அதனால் பிரித்தானியாவின் பொருளாதார விருத்திக்கு, பாதுகாப்புக்கு, ஐரோப்பாவுடானான நல்லுறவுக்கு என்ன நடக்கும் என்பவை பலரின் கேள்விகளாகும்.

**-இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**
**நன்றி: முகநூல்**

# பல்கலைக்கழக மாணவர் இணைப்புக்கு 'புதிய திட்டம் Z Score மதிப்பாய்வு'

கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்கள், பல்கலைக்கழகங்களுக்குள் உள்வாங்குவதற்காக இஸட் ஸ்கோர் (Z Score) முறைமையை மதிப்பாய்வு செய்வதற்கு, அமைச்சரவை அங்கிகாரமளித்துள்ளது.

நடைமுறையில் இருக்கும் 40 சதவீத அடிப்படைத் திறமை மதிப்பீட்டில் எவ்வித மாற்றங்களையும் மேற்கொள்ளாமல், மாவட்ட அடிப்படைக்குப் பதிலாக, பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட புதிய முறைமையை அறிமுகப்படுத்துவது குறித்தும், அமைச்சரவையில் ஆராயப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், உயிரியல் விஞ்ஞாம், கணிதம், தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் கலை ஆகிய பாடவிதானங்களைக் கொண்ட 3,098 பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு, இந்த "பாடசாலை அடிப்படை" திட்டத்தை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்தப் புதிய முறைமை, இவ்வருடம் இடம்பெற்ற உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குப் பொருந்தாதென்றும் 2020ஆம் ஆண்டில் இடம்பெறும் பரீட்சையின் போதே பரீட்சித்துப் பார்க்கப்படுமெனவும், கல்வியமைச்சர் டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் 12.12.2019 இல் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

$$z = \frac{x - \mu}{\sigma}$$

இதன்போது தொடர்ந்து கருத்துரைத்த அவர், திறைமையின் அடிப்படையில் பல்கலைக்கழங்களுக்குத் தெரிவுசெய்யப்படும் 40 சதவீதமும், வறுமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் 5 சதவீதத்திலும் எவ்விதமான மாற்றங்களும் இல்லை எனவும் இஸட்கோர் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் 55 சதவீதமே, பாடசாலை அடிப்படையில் மாற்றியமைக்கப்பட உள்ளதென்றார்.

**முன்பக்கத் தொடர்ச்சி...**

உண்மையில் மாகாண சபைகள் அமைக்கப்பட்டதின் நோக்கம், சிறுபான்மை இனங்களுக்கும், மாகாணங்களுக்கும் அதிகாரத்தை பங்கிட்டு அளிப்பதற்காகவே. தனியே தமிழ் மக்கள் செறிந்து வாழும் மாகாணங்களுக்கு மட்டும் மாகாண சபை முறைமையை அமல்படுத்தினால் அது சிங்கள மக்களால் இனவாத கண்ணோட்டத்தில் பார்க்கப்படும் என்பதால், இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் இது பொதுவாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதை இந்தியாவின் இராஜதந்திரம் என கருதலாம்.

ஒன்பது மாகாணங்களுக்கும் மாகாண சபைகள் அமைக்கப்பட்டதால், 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை ஒன்பது மாகாண சபைகளுக்கும் வழங்கினால் அதை சிங்கள மக்களை அதிகமாக கொண்ட ஏனைய ஏழு மாகாண சபைகளும் கூட எதிர்க்க போவதில்லை. எனவே ஆட்சியாளர்கள் காட்ட முனைவது போல இது ஒரு சர்ச்சைக்குரிய விடயமல்ல.

ஆனால் ஆட்சிக்கு வந்தவர்கள் எல்லோரும் மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கினால் பெரும்பான்மை சிங்கள மக்கள் அதை எதிர்ப்பார்கள் என்ற நொண்டி சாட்டு ஒன்றை தொடர்ந்து கூறி வருகிறார்கள். ஆனால் சிங்கள மக்கள் அப்படி எதிர்ப்பார்கள் என்பதற்கு இவர்களிடம் என்ன ஆதாரம் இருக்கிறது? இந்த விவகாரம் குறித்து வேண்டுமானால் நாட்டு மக்களிடம் ஒரு கருத்து கணிப்பை மேற்கொண்டு பார்க்கலாமே?

புதிய ஜனாதிபதி தனது இந்திய விஜயத்தின்போது அங்குள்ள சில ஊடகங்களுக்கு அளித்த பேட்டியின் போதும், மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கும் வகையில் 13ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்று கூறியிருக்கிறார். இலங்கையிலும் சில சந்தர்ப்பங்களில் அதை திரும்பவும் கூறிருக்கிறார். அவரது அண்ணனும் பிரதமருமான மகிந்த ராஜபக்சவும் அவ்வாறுதான் கூறுகின்றார்.

அதுமட்டுமல்லாமல், அதிகார பகிர்வை விட அபிவிருத்திதான் முக்கியமானது எனவும் ஜனாதிபதி கோத்தபாய கூறுகின்றார்.

தனித்தமிழ் நாட்டை இலங்கையின் அரசியல் தலைவர்களும் மக்களும் நிராகரிப்பது நியாயமானது என ஏற்றுக்கொள்ள முடியும். அதேபோல வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சமஸ்டி அமைப்பு முறையிலான தீர்வை வழங்குவதையும் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதிலும் உண்மை இருக்கிறது. ஆனால் குறைந்தபட்ச தீர்வான மாகாண சபை முறையையும் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என ஆட்சியாளர்கள் சொல்வது பெரும்பான்மை சிங்கள மக்களின் கருத்தல்ல. அது ஆட்சியிலுள்ளவர்களின் இனவாத நிலைப்பாடாகும்.

ஏனெனில், சிங்கள மக்கள் மாகாண சபை முறைமையை ஏற்கவில்லை என்றால், அதற்கான தேர்தல்களில் பங்குபற்றாமல் ஆரம்பத்திலேயே புறக்கணித்திருப்பார்கள். சிங்கள மக்களின் உண்மையான பாதுகாவலன் தான்தான் என கூறிக்கொண்ட ஜே.வி.பி. ஆரம்ப காலங்களில் மாகாண சபை தேர்தலை புறக்கணித்தது. ஆனால் மக்கள் அதில் முழுமையாக ஈடுபாடு காட்டியதால் பின்னர் ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு மாகாண சபை தேர்தல்களில் பங்குபற்றி வருகின்றது.

ஆனால் நாட்டின் தற்போதைய ஜனாதிபதியும், பிரதமரும் அதிகார பகிர்வு முக்கியமல்ல, அபிவிருத்திதான் முக்கியம் என்று சொல்வதை பார்த்தால், அவர்களிடம் இனப்பிரச்சினை தீர்வுக்கான திட்டம் எதுவுமில்லை என்றுதான் சிந்திக்க வேண்டியுள்ளது. இது மிகவும் ஆபத்தான ஒரு நிலைமை.

உண்மையில் ஜனநாயகமும் அதிகார பகிர்வும் அபிவிருத்தியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவை. இந்த உண்மையை உலகில் சோசலிச முறையில் வளர்ச்சி அடைந்த முன்னைய சோவியத் யூனியன், சீனா போன்ற நாடுகளின் அனுபவத்தில் இருந்தும், அதேபோல முதலாளித்துவ முறையில் வளர்ச்சி அடைந்த அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளின் அனுபவத்தில் இருந்தும் அறிந்துகொள்ள முடியும். ஏன் எமது அண்டை நாடான இந்தியாவும் இதற்கு ஒரு உதாரணம்.

அதை விடுத்து முன்னர் ஆட்சியில் இருந்த பலர் சொன்னது போல, செய்தது போல, அதிகார பகிர்வு கிடையாது என்ற நிலைப்பாட்டை தற்போதைய ஆட்சியாளர்களும் பின்பற்றுவார்களாக இருந்தால், தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் முற்றுமுழுதாக இழக்க வேண்டி வரும். அது திரும்பவும் நாட்டை இருள் சூழ்ந்த யுகத்திற்கு, அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லும். இதை தற்போதைய ஆட்சியாளர்கள் உணர்வது அவசியம்.

ஒருவேளை கடந்த ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை இன மக்களான தமிழ் – முஸ்லீம் மக்கள் தற்போதைய ஜனாதிபதி கோத்தபாயவுக்கு வாக்களிக்காத காரணத்தால் அவரது அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வில் அக்கறை செலுத்த விரும்பவில்லை என்றால் அது மிகவும் தவறான தீர்மானமாகும்.

ஏனெனில், தமிழ் மக்களை பொறுத்தவரையில் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவர் போட்டியிட்ட போதும் அவருக்கு வாக்களிக்காமல் இன்னொரு சிங்கள வேட்பாளரான சஜித் பிரேமதாசவுக்கே வாக்களித்து இருக்கிறார்கள். அதற்கு காரணம் ராஜபக்சாக்கள் தமிழர்களின் முதல்தர விரோதிகள் என அவர்களது தலைமை (தமிழ் தேசிய கூட்டமைப்பு) தொடர்ச்சியாக செய்துவந்த பிரச்சாரமாகும்.

இந்த நிலைமையில், தமிழ் மக்களின் அரசியல் தலைமையின் பொய்யான பிரச்சாரத்தை உடைதெறிந்து, தமிழ் மக்களை சரியான திசைவழிக்கு கொண்டு வருவதானால், குறைந்தபட்சம் மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரங்களை வழங்குவதன் மூலமே அதை செய்ய முடியும்.

எனவே, இந்த விடயத்தில் ராஜபக்ச சகோதரர்கள் என்ன செய்ய போகிறார்கள்? தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை தீரத்து அவர்களை தம்முடன் அரவணைக்க போகிறார்களா? அல்லது அவர்களை உதாசீனப்படுத்தி தொடர்ந்தும் பிற்போக்கு, இனவாத ஐக்கிய தேசிய கட்சியினதும், தமிழ் தேசிய கூட்டமைப்பினதும், இலங்கையில் சிறுபான்மை இனங்களைத் தூண்டி விட்டு இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் அந்நியர்களதும் பக்கம் தள்ளிவிடப் போகிறார்களா?

# இந்திய குடியுரிமை சட்ட திருத்த மசோதா




இப்போது பரபரப்பாக பேசப்படும் இந்திய குடியுரிமை சட்ட திருத்த மசோதாவானது, மக்களின் கவனத்தை, நாட்டின் முக்கிய பிரச்சனைகளில் இருந்து திசைதிருப்பும் வழக்கமான பிஜேபியின் செயல்களில் ஒன்று.

ஏதோ, பாகிஸ்தான் ஆப்கனிஸ்தான் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து தினந்தோறும் ஆயிரக்கணக்கான இந்துக்கள், இந்தியாவுக்கு புகலிடம் தேடி வருவதைப் போலவும், அந்த நாடுகளில் இந்துக்களுக்கு கொடுமைகள் நிறைய நடப்பதை போலவும் பிஜேபி கும்பல் இங்கே தவறான பொய் பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது. நாடு சுதந்திரம் அடைந்து, பிரிவினை ஏற்பட்டபின் பாகிஸ்தானுக்கு செல்ல விரும்பிய முஸ்லிம்கள் அங்கே சென்றுவிட்டார்கள், அதே போல அங்கிருந்த இந்துக்கள், இந்திய பகுதிக்கு இடம்பெயர்ந்து விட்டார்கள். அப்படி போக விரும்பாத மக்கள் அப்படியே அந்தந்த நாடுகளில் வசிக்கிறார்கள். அந்த காலகட்டங்களில் குடிபெயர்ந்து வந்தவர்களுக்கு இந்திய குடியுரிமை அப்போதே வழங்கப்பட்டு விட்டது.. பிஜேபி தலைவர் அத்வானி, மன்மோகன் சிங் போன்றவர்கள் எல்லாம் அப்படி இடம்பெயர்ந்தவர்கள் தான்.. குடியுரிமை இல்லாமலா இங்கே அரசாங்க பதவிகளை பெற்றார்கள்?

இப்போதும், அவ்வப்போது ஒருசிலர், இந்துக்கள், அந்நாடுகளில் இருந்து பல்வேறு காரணங்களுக்காக புகலிடம் தேடி இந்தியாவுக்கு வருவதுண்டு. அப்படி வருகிறவர்கள் எண்ணிக்கை மிக மிக குறைவு. பத்தாண்டுகளுக்கு சில நூறு என்பதே அதிகம். அவர்களுக்கும், ஏற்கனவே சட்டத்தில் உள்ளது போல, 12 ஆண்டுகள் இந்தியாவில் வசித்தால், இந்திய குடியுரிமை வழக்கப்பட்டு வருகிறது. இது தொடர்ச்சியாக நடைபெற்றுவருவதுதான்.

அதே போல பாகிஸ்தான் பங்களாதேஷ் நாடுகளில் இந்துக்களுக்கு பாதுகாப்பில்லை என்ற பிரச்சாரத்திலும் முழு உண்மை கிடையாது. இங்குள்ள மதவெறியர்கள் போலவே, அங்கேயும் இருக்கிறார்கள், அவ்வளவுதான். ஆனால், அந்நாட்டு அரசாங்கங்கள், அந்நாட்டு சிறுபான்மையினருக்கு (இந்து சீக்கிய பிரிவினர்) ஆதரவாகத்தான் செயல்படுகிறார்கள். சமீபத்தில் கூட பாகிஸ்தான் அரசு பல இந்து கோயில்களை புணரமைக்க உதவி செய்தது, சீக்கியர்களின் புனிததலத்தை இந்திய சீக்கியர்களின் வழிபாட்டிற்கு திறந்து விட்டுள்ளது. பங்களாதேஷ் நாட்டின் பொருளாதாரம், இந்திய பொருளாதாரத்தைவிட விரைவாக, வேகமாக வளர்ந்து வருகிறது, எனவே அங்கிருந்து இந்தியாவுக்கு கள்ளத்தனமாக குடியேறுகிறார்கள் என்பதிலும் உண்மையில்லை. இருக்கும் அகதிகள், 1971 பங்களாதேஷ் சுதந்திர போரின் போது வந்தவர்கள், அதில் பெங்காலி இந்துக்களும் இருக்கிறாரகள், பெங்காலி முஸ்லிம்களும் இருக்கிறார்கள்.

## JP.பிரகாஷ்

எனவே, இந்தியா தற்போது எதிர்நோக்கும் பிரச்சனைகளான வீழ்ந்துபோன பொருளாதாரம், வேலைவாய்ப்பின்மை, அதிகரிக்கும் வறுமை, வெகுவாக குறைந்துபோன செலவழிக்கும் திறன், பெருகிவரும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள், வெங்காயம் போன்ற பொருட்களின் விலைவாசி உயர்வு, அதிகரிக்கும் சுற்றுசூழல் பாதிப்புகள். இப்படி நீண்ட பட்டியலில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்ப அவ்வப்போது ஏதாவது ஒரு மத / நாட்டுப்பற்று விஷயங்களை பிஜேபி கும்பல் கையிலெடுக்கும். அது போன்ற ஒன்றுதான் இந்த இந்திய குடியுரிமை சட்ட திருத்த மசோதா.

முக்கிய குறிப்பு : முஸ்லீம் லீக் ஜின்னா தனி நாடு கோருவதற்கு முன்பே, 1935 இல் மத அடிப்படையில் இரு நாடுகளாக பிரிக்கவேண்டும் என சொன்னவர்கள் பிஜேபி RSS முன்னோடி சாவர்க்கர் ஶ்ரீ ஷயாம் பிரசாத் முக்கர்ஜி போன்ற ஹிந்துத்துவா அமைப்புகளின் தலைவர்கள் தான். அதன் பின்புதான் ஜின்னா, பாகிஸ்தான் தனி நாட்டை கோரினார். ஆனால், கம்யூனிஸ்ட் மற்றும் காங்கிரஸ் கட்சி இப்படி பிரிப்பதை எதிர்த்தது. இதுதான் உண்மையான வரலாறு.

---

"நான் இங்கு சட்டம் படிக்கிறேன். இன்று எனக்கு அரசியல் சாசனத் தேர்வு நடக்கவிருந்தது. சட்டம் என ஒன்று மிச்சம் இருக்கிறதா இங்கு? மாணவர்கள் விடுதிக்குள்ளும், மாணவிகளின் விடுதிக்குள்ளும் போலீஸ் புகுந்து தாக்குகிறது. மாணவர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடுகிறார்கள். இது என்ன ஜனநாயக நாடா? எனது நண்பர்கள் இரவு முழுவதும் அழுதார்கள். என்னால் என் பல்கலைக்கழகத்தில் தங்க முடியவில்லை. இங்கிருந்து வீட்டுக்குச் செல்கிறேன். நாங்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடத் தொடங்கிவிட்டோம்.நான் முஸ்லிம் இல்லை. நாளைக்கு என் நண்பர்கள் இந்தியர்களாக இருப்பார்களா எனத் தெரியவில்லை''

**–ஜாமியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவி**